
20 காசு

# காஞ்சி

0-4-69 நிறுவனர்: அண்ணாதுரை




தமிழக சட்டப் பேரவைத் தலைவர் திரு. புலவர் கோவிந்தன் அவர்கள்

தம்பி

அடித்தாலும், அணைத்தாலும், ஐய, நின் அன்(பு) பனும் பாசமது அறிந்துருகும்
என்னெத்த அடியவர்கள் இங்குண்டு அதனல் மின்னெத்த இடை உமையாள், கண்பொத்த
பொன்னெத்த மேனியனும், பொடிபூசி பண்ணெத்த மொழிகேட்டு இன்புற்று,
மண்விட்டு விண் வரட்டும் என்றே நிற்கும் மாமணியே! நின் நோக்கம் அறிந்தேனன்றே!
மற்றையோர் உற்றகுறை பற்றித்தாக்க இதுமுறையோ? இது அறமோ? என்றே கேட்பர்
கற்றைச் சடையதனில் மதிசூடிக் காட்டும் தேவ! உற்றகுறை உண்டெனினும்-உள்ளம் நோகேன்
ஊர்தோறும் உன்புழைப் பாடிச் செல்வேன், காரழகுமிகுந்திடு நந்தம் நாட்டில் கண்கசக்கி
கடிந்துரைப்போர் போக்கினரைக் கண்டால் காய்வேன்; கண்ணுதலைக் கொணடவனை அறியாதானே
பண்டுமுதல் அவன்கொண்ட முறை ஈதன்றே? தொண்டு செயும் தூயவரின் பெண்டைக்கேட்டான்
துடித்திடாது அறுத்திடுக மகவை என்றான், பெயர்த்தெடுத்த கண்ணினை அப்பிக்கொண்டே
பெம்மானும் இருந்த நிலை அறியாய் போலும்; அடித்தாலும், அணைத்தாலும் ஐயன் அன்றே
அவனடியை மறந்திடுதல் அடியார்க்குண்டோ! அணைத்தாலென், அடித்தாலென், வேறுவேறு?
அணைத்துமே அவனுற்றும் வினையே யன்றே? அரகரா மகதேவா! என்றேத்தித் தொழுவதன்றி
ஆகாது ஐயன் செயல் அடுக்காது, என்பார் உண்டோ? ஆன்றோர்கள் அளித்த நெறிஈதேயன்றே
அறியாது போனதுமேன், அறிவற்றோனே! அடித்தாலும் அணைத்தாலும் அவனே ஐயன்!
அடிதொழாதிருந்திடுவார், அடையார் இன்பம்.

பத்து நாட்களுக்கு முன்பு நான் குன்றக்குடி மடத்துக்குச் சென்றிருந்தேனே, அங்கு யாரோ எனக்குப் பாடிக்காட்டிய பதிகம்போலும் என்று எண்ணிக்கொள்ளாதே தம்பி,

# அடித்தாலும்..... ....அணைத்தாலும்...

அடிகளாரின் அன்பழைப்புப் பெற்று மடம் சென்ற எனக்கு, சிறந்த உணவு சுவைமிக்க உரையாடலுடன் சேர்த்தளிக்கப்பட்டது; பதிகம் தரப்படவில்லை. மேலும், தம்பி, இது பதிகமும் அல்ல, பதிகம் போன்றது! சமதர்மம் அல்ல சமதர்மம் போன்றது, என்று ஆவடிப் பருவத்தின்போது பேசிக்கொண்டார்களே அது போல, என்று வைத்துக்கொள்ளேன்!

பதிகம்—முறைப்படி, ஒருவர் என்னிடம் பாடிக்காட்டியதுண்டு. இலக்கண முறைப்படி அவர் தந்த பதிகத்தை, நினைவிற்கு வந்த வடிவத்தில் தந்துள்ளேன்—பொருட்குற்றம் கிடையாது — வடிவம் புலவர்களால் திருத்தி அமைக்கப்பட வேண்டியதாக இருப்பதை உணருகிறேன். ஆனல் நான் உனக்குப் பதிகத்தின் வடிவம் காட்ட அல்ல இதனைத் தருவது; அதிலே உள்ள பொருளுக்கும் அதற்கும் இன்றைய அரசியல் நிகழ்ச்சிகளுக்கும் உள்ள வேடிக்கையான தொடர்பினைக் காட்டுவதற்குமேயாகும்.

பல நாட்களுக்கு முன்பாக நான் கேட்ட இந்தப் பதிகம் என் நினைவிற்கு வந்தது,

(5-ம் பக்கம் பார்க்க)



காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

மலர் 5 | 20—4—69 | இதழ் 40

# பிரதமரின் வருகை

பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் இத்திங்கள் 17ம் நாள் தமிழகத்தின் வரட்சிப் பகுதிகளில் ஒரு சில பகுதியை நேரில் பார்வையிட்டுச் சென்றுறிக்கிறார்.

இந்திரா அம்மையாரை தமிழகத்துக்கு அழைத்துக் காட்டும் பெருமை தமிழக அமைச்சர்களுக்கும் குறிப்பாக முதலமைச்சருக்கும் உண்டு. தமிழ் நாட்டில் பல மாவட்டங்களுக்கும் அமைச்சர்கள் சுற்றுப் பயணம் செய்து, கண்டவற்றையும் உணர்ந்தவற்றையும் அரசிடம் எடுத்துக்காட்டி நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்படவேண்டிய வரைமுறைகள் பற்றிக் கருத்தறிவித்திருக்கிறார்கள்.

இதன் அடிப்படையிலேயே மாவட்டக் கலெக்டர்கள் அனைவரும் அமைச்சர்கள் முன்னிலையில் கூடி விவாதித்து நிவாரணத்துக்காக 20 கோடி ரூபாய் தேவைப்படலாம் என்று தெரிவித்திருக்கிறார்கள்.

இந்த அடிப்படையிலேயே நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதும், அதற்கான தொகைகள் முதல் கட்டம், இரண்டாம் கட்டம் என்ற ரீதியில் ஒதுக்கப்பட்டு பணிகள் தொடங்கி நடைபெற்றுக் கொண்டும் வருகின்றன.

இந்த நிலையில் பிரதமரின் தமிழக வரட்சிப் பகுதிகளின் சுற்றுப்பயணம் பற்றித் தமிழ்நாடு காங்கிரசுத் தலைவர் மாறுபட்டக் கருத்தறிவித்திருக்கிறார். பிரதமர் இந்தச் சூழ்நிலையில் பயணம் மேற்கொண்டிருக்கக் கூடாது அல்லது அழைத்து வந்து காட்டியிருக்கக் கூடாது என்ற முறையில் அவர்பேசி இருக்கிறார்.

தமிழகத்தில் வரட்சி நிலை அப்படியொன்றும் கடுமை இல்லையென்பது சுப்பிரமணியம் அவர்களது வாதம். அதே நேரத்தில் அவரது கட்சிக்காரர்களுடைய எழுத்தும் பேச்சும் அதற்கு நேர்முரணாக விருக்கின்றன. இந்த முரண்பாடுகள் பற்றியெல்லாம் அக்கறை காட்டாத அவர், பிரதமரின் வருகைமீது அளவு கடந்த அக்கறைகாட்டியிருப்பதுடன், தீய விளைவுகள் விளைக்கத்தக்க கருத்தினையும் தெரிவித்திருக்கிறார்.

தமிழக அரசு மிகுந்த அக்கறையுடன் நிவாரணப் பணிகள் மேற்கொண்டு செயலாற்றி வருவது சுப்பிரமணியம் அவர்களுக்கு அளவுக்குமீறி எரிச்சலை உண்டாக்கி விட்டிருக்கிறது. அந்த எரிச்சல் காரணமாகவே ஏதேதோ பேச நினைக்கிறார். வேறுபட்ட கருத்துக்கள் வாயிலிருந்து உதிர்ந்து விடுகின்றன.

வரட்சி நிலை தமிழகத்தில் ஏற்படக்கூடும் என்று ஏழெட்டு மாதங்களுக்கு முன்பே தான் எச்சரிக்கை விடுத்ததனை, அரசு பொருட்படுத்தாததனாலேயே, பயங்கர நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று அவரே இருகிழமைகளுக்கு முன்பு பேசி இருக்கிறார்.

இப்போது பிரதமர் நேரிலேயே வந்து பார்வையிட்டு வருகிறார் என்றதும், அவரது சுருதி மாறுகிறது, புலம்புகிறார்.

வானம் பொய்த்த நிலையையும் அதன் எதிரொலியினையும் காங்கிரசுக்கட்சியும் சுப்பிரமணியமும் அனுபவ வாயிலாக அறிந்திருக்கிறார்கள், ஒரே ஒரு ஆண்டு பருவ மழை தவறியதன் எதிரொலி என்ன வென்பதை அவர் நன்கறிவார்.

தொடர்ந்தாற்போல் ஈராண்டுகள் மழை தவறி, பருவம் பாழ்பட்டு விட்டதன் எதிரொலியும் கடுமையும் எப்படி இருக்க முடியும் என்பதைத் தெளிவாக சுப்பிரமணியம் அறிந்திருந்தும் முரண்பட்ட கருத்துக்களை வெளியிடுகிறார் என்றால், நிலைமையைக் குழப்ப முயல்கிறார் என்பதுடன், பிரச்னையையும் திசை திருப்பிவிட்டு அரசியலாக்கிக் காட்டி அதிலே கிடைக்கும் பயனை அறுவடை செய்து கொள்ளலாம் என்பது அவரது அற்ப ஆசையாகும் அதற்காக நம்மால் பரிதாபப் படாமலிருக்க முடியாது.

இருகிழமைகளுக்கு முன்னே மத்திய அதிகாரிகள் சிலபேரைக்கொண்ட குழு வொன்று வந்து வரட்சிப் பகுதிகளைப் பார்வையிட்டு விட்டுச் சென்று, அறிக்கையினையும் அளித்துவிட்டதாகத் தெரிகிறது.

அதேநேரத்தில் தமிழக அரசின் வேண்டுகோள் பேரில் உடனடி நிவாரணமாக $1\frac{1}{4}$ கோடி ரூபாயும் 20000டன் அரிசியும் தர ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

கோடிக்கணக்கு என்றுபார்க்காமல், தேவைக்கணக்கு என்ற அடிப்படையில் அரசு செலவிட்டுக் கொண்டு வருகிறது.

இந்த நிவாரணப் பணியையே, வளர்ச்சிக்குரிய பணியாகவும் ஆக்கிக் கொள்ளுமாறு முதல்வர் கருத்தறிவித்திருக்கிறார். அந்த அடிப்படையிலேயே பணிகளும் மேற் கொள்ளப்பட்டிருக் கின்றன.

இவை யெல்லாவற்றுக்கும் மேலாக, தமிழக காங்கிரஸ் பற்றி டெல்லியில், நாடாளு மன்ற உறுப்பினர் மனோகரன் அவர்கள் பிரதமரிடம், தமிழக முதலமைச்சரை வைத்துக்கொண்டு குறிப்பிட்டபோது, காங்கிரசார் முரண்பாடாக நடப்பது ஏனென்று முதல்வருக்குத் தெரியும் என்று பிரதமர் பதில் தந்திருக்கிறார்.

அதன் மூலம் நாம் யூகித்துணர்வது எதிர்க்கட்சியென்றால் அப்படித்தான் எதிர்க்கும் கட்சியாக இருக்கும் என்பதுதான்.

அரசு செய்யும் எந்தக் காரியத்தையும் எதிர்ப்பது தான் எதிர்க்கட்சி இலக்கணம் என்று சுட்டிக்காட்டி இருக்கலாம்; அல்லது தமிழகக் காங்கிரசின் பெருந்தன்மை அவ்வளவுதான் என்றும் சுட்டிக்காட்டி இருக்கலாம்.

எப்படியானாலும் வரட்சிநிலை பற்றி மறுத்துரைப்பது பொதுமக்களுக்குச் செய்யப்படும் நன்மைகளை மறுத்துரைப்பது என்பதாகும்.

நிலைமைகளை நேரில்வந்து கண்டறிந்து சென்றிருக்கும் பிரதமர் இந்திரா அம்மையார் அவர்கள், தமிழக அரசின் கோரிக்கைகள் நியாயமானவை—தேவையானவை என்பதை உணர்ந்துகொள்ள மதுராந்தகம் ஏரியும் மாமண்டூர் ஏரியும் சான்று காட்டும்; சென்று வரும் திக்கெல்லாம் சாட்சி கூறும்.

பார்வையிட்டுச் சென்றிருப்பதன் மூலம் பலன் கிடைக்கும் என்றாலும், கிடைக்கும் பலன் கணிசமான அளவுக்கு இருக்கவேண்டும் என்றும் பிரதமரைக் கேட்டுக் கொள்கிறோம்.


தமிழகக் காங்கிரசின் இதயம் எப்படி இருக்கிறது என்பதை உணர்ந்துள்ள பிரதமர், சுப்பிரமணியனார் போன்றோரது கருத்துக்களைப் பொருட்படுத்த மாட்டார் என்றே நம்புகிறோம்.

# கழகக் காளையே! கடமை வீரா!!

பொய்யர்களின் புளுகு மூட்டையெனும் பனி மூட்டம்

மக்களின் நல்வாழ்க்கை இலட்சியங்களை மறைக்கிறதே உணர்கிறாயா?

## பனியின் இடர்ப்பாட்டை அழிப்பது எழுஞாயிறு அன்றோ!




வாக்காளர் பெருமக்களிடம்

## 'உதயசூரியனை'

நினைவுபடுத்து!

## நாளை நமது! நகராட்சிகள் நம்முடையன!

# வடநாட்டு ஆதிக்கம் வளருதே, வாட்டுதே!

2ம் பக்கத் தொடர்ச்சி

அடித்தாலும் அணைத்தாலும், ஐயன், அடிதொழுவேன்—என்று பாடினார் யாரோ, பாவம் பக்தியில் கட்டுண்ட நிலையில்.

பெண்டு கேட்டான், பிள்ளைக்கறி கேட்டான், பேயாக அலையச் செய்தான்—எனினும் பெம்மான் செய்தது எனவே அவன ஆற்றிய வினைக்குக் காரணம் அவனறிவான் என்றெண்ணி. அகமகிழ்ந்து அவனடி தொழுதேன் என்று கூறுவதுதான் ஆன்றோர் நெறி என்பதை எடுத்துக்காட்டும், பதிகமல்லவா; மறுபடியும் ஒரு தடவை பார் தம்பி.

அக்ரமம், அநீதி நிலவிடக் காணும்போது, ஊர் கெடுப்பவன் உயர்ந்து உழைப்பவன் உருக்குலையும்போது, பொய்யனும் புரட்டனும் போக போக்கியத்தில் புரள, நெறிதவறாதான், அறம் பிறழாதான் வறுமைப் படுகுழியில் வீழ்ந்துழலும்போது, இந்தப் பதிகம்கூடப் பொருளற்றுப்போகிறது. கடவுள் நெறியில் நம்பிக்கை கொண்டவர்களுக்கே!

அடித்தாலும் அணைத்தாலும் ஐயனன்றோ, என்ற அமைதியைப் பெற முடிவதில்லை—அவர்களாலேயே.

அறநெறி தவறுவோனை அடித்திடவும், அவ்வழி தவறாதானை அணைத்திடவும் வேண்டுவதன்றோ ஐயன் முறையாக இருத்தல் வேண்டும் என்று இக்காலை, கேட்கின்றனர்.

அருள் விஷயமாகக் கூறப்படும் பதிகத்தின் கருத்தே ஆராய்ச்சி மிகுந்துள்ள இந்தக் காலத்தில், பொருளற்றதாகித் தெரிகிறபோது, அடித்தாலும் அணைத்தாலும் அவனே எமது ஐயன் என்று ஏங்கித் தொழுதிடும் போக்கு, அரசியலில் கொள்ளப்படுமானால், எப்படிப் பொருந்தும்.

ஆனால் தம்பி, அனைவரும் இந்த ஆபத்தான நிலையில் தங்களைச் சிக்கவைத்துக்கொள்வதில்லை—ஒருசிலர் தான்; மற்றையோர் ஐயன், அதாவது ஆள்பவர் எந்தப் போக்குடன் நடந்துகொள்கிறாரோ, அதனால் எத்தகைய பயன் விளைகிறதோ, அதற்கொப்பத்தான் அந்த ஆளவந்தாருக்கு ஆதரவு காட்டுவதோ, திருத்த முற்படுவதோ அல்லது விரட்டப் போரிடுவதோ ஆகிய முறைகளை வகுத்துக்கொள்கிறார்கள்.

பட்டினிபோட்ட மகராஜன் பல்லாண்டு, பல்லாண்டு வாழ்க.

சோறுபோட்டுச் சுவையூட்டிய சூதுக்காரன் அடியோடு ஒழிக—என்று எவரேனும் கூறுவரோ?

அரசியலில், நேசமும் பாசமும், தொடர்பும் சொந்தமும் ஏற்பட்டுவிடுவது சகஜம் — ஆனால் அது, நாம் மேற்கொண்டுள்ள காரியத்துக்கே உலைவைத்திடுவதாகவும், நமது நீண்டகால உழைப்பின் உறுபலனையே கெடுத்தொழிப்பதாகவும் அமைந்துவிடுமானால், நாம் அந்தத் தொடர்புக்குக் கட்டுப்பட்டு, பதிகம் காட்டினேனே, அதிலே காணக்கிடப்பதுபோல அடித்தாலும் அணைத்தாலும் அவனே ஐயன் என்று தீர்மானித்துக்கொள்வது.

வடநாடு, தென்னாட்டின் மீது ஆதிக்கம் செலுத்துகிறது என்பது நமக்குத் தெரிகிறது. நமது நெஞ்சில் தீயாகப் பாய்கிறது. நமது வலிவினைப் பெருக்கிக் கொண்டு, இந்த அக்ரமத்தை ஒழித்திட வேண்டும் என்ற நோக்குடன் வாய்ப்புக்கேற்றவண்ணம் பணியாற்றுகிறோம்.

காமராஜர் வடநாடு, தென்னாடு என்று பிரித்துப் பேசுவதே பித்த முதிர்ச்சி — சித்தக் குழப்பம் — என்கிறார். இந்த நோக்கத்தைத் தமது அரசியல் நடவடிக்கைகளில் தவறாது காட்டுகிறார்.

வடநாட்டு ஆதிக்க ஒழிப்புக்கு நாம் கட்டுப்பட்டவர்கள்; காமராஜர் அந்தத் திட்டத்தை எதிர்த்திடுபவர்; இந்நிலையில், நமக்கும் காமராஜருக்கும் தொடர்பு எவ்வகையிலோ ஏற்பட்டுவிடுகிறது என்றால், அது எந்த அளவோடு நிற்கவேண்டும், எந்த வகையில் வடிவம்கொள்ளவேண்டும்.

அடித்தாலும் அணைத்தாலும் அவனே என் ஐயன்! என்ற அளவுக்கா செல்வது!

கூடையில் வைத்துச் சுமந்துகொண்டு போனாளாமே உத்தமி நளாயினி, அந்தப் போக்கின் அளவுக்குமா செல்லவேண்டும்.

கூடாது! அது தீது! அது கொள்கைக்கு வெற்றி தராது! தவறான போக்கு அது, ஆகாது—என்றெல்லாம் தம்பி! நீ கூறுகிறாய், கேட்கிறது; மகிழ்ச்சி ஊற்றெடுக்கிறது; ஆனால் மற்றோர் புறமிருந்து பதிகம் கேட்கிறதே! அடித்தாலும், அணைத்தாலும், அவரே எமது ஐயன்!—என்று! என்னென்கிறாய், இந்தப் போக்கினை தம்பி, ஆராயச் சொல்கிறேன், அவர்களைப் போய் நீ கேட்டுவிடாதே நம்மீது மெத்தக் கோபம் கொண்டவர்கள்!

காமராஜர் நம்மவர், ஆகவே நல்லவர்

காமராஜர் நல்லவர், ஆகவே நம்மவர்

நாம், நம்மவர் என்பதற்காக மட்டும், காமராஜர் நல்லவர் என்று சபலம்கொள்ள மறுக்கிறோம் — வேறு சிலரோ, காமராஜர் நம்மவர். ஆகவே நல்லவர் என்று பாசம் காட்டுகிறார்கள், பதிகமே பாடுகிறார்கள், அடித்தாலும் அணைத்தாலும் அவரே எமது ஐயன்!—என்று.

எத்தனை பக்தி! என்று பதிகம் கேட்டுக் கூறிடுவதுபோலத்தான், ஆஹா! என்ன பாசம்! எத்தனை நேசம்! என்று கூறத்தோன்றுகிறதே தவிர, இதிலே பொருள் இருப்பதாக என்னால் உணர முடியவில்லை.

பக்தி மேலீட்டால் பதிகம் பாடுபவர் கூறுகிறாரல்லவா, அடித்தாலென் அணைத்தாலென் அனைத்தும் உன் வினையன்றோ என்று, அதுபோல காமராஜர், கிளர்ச்சிகளை அடக்காதிருந்தாலும் அழித்தொழிக்க முற்பட்டாலும் எல்லாம் நன்மைக்கே! என்றும், எப்படிச் செய்தாலும அவர் நல்லவர் என்றும்கொள்ள என் மனம் இடந்தரவில்லை—வேறு சிலருக்கு எப்படி மனம் இடம் தருகிறது என்பது பற்றி எண்ணிப் பார்த்தபோதுதான் பழைய பதிகம் நினைவிற்கு வந்தது, உனக்குக்கூற முற்பட்டேன்,

பெரியாரைக் கூடக் கைது செய்கிறாரே, காமராஜர் என்று கோபம் வருகிறது—உடனே பதிகம் பாடப்படுகிறது—அதற்காக அவர்மீது கோபப்படுவது போக்கிரித்தனம், அது அவர் கடமை.

திராவிடர்களைச் சிறையில் தள்ளுகிறார் காமராஜர், ஏன்

அது அவர் கடமை!

# பாசவலை வீசியும் பயனில்லை—அங்கே!

திராவிடர்களை அடிமைப் பிடியில் வைத்திருக்கும் வட நாட்டு ஆதிக்கத்தை ஒரு துளியும் காமராஜர் எதிர்க்க மறுக்கிறாரே, அது ஏன்?

அது அவர் நிலைமை!

இலங்கையில் தமிழர்கள் இம்சிக்கப்படுவது பற்றி, இதுவரையில் ஒரு வார்த்தை ஏன் என்று காமராஜர் கேட்கவில்லையே அது ஏன்?

அது அவர் காட்டும் பொறுமை.

தேவிகுளம் பீர்மேடு தமிழருக்கு நிச்சயமாகக் கிடைத்திடச் செய்வேன் என்று வாக்களித்துவிட்டு, பிறகு பறி கொடுத்துவிட்டு, வாளாய் இருக்கிறாரே, அது ஏன்?

அது அவருடைய நிலைமை!

சென்னை என்ற சீரழிவான பெயர் வேண்டாம் தமிழ் நாடு என்று பெயர் வைக்கக்கூடாதா, இது: பெரியாருக்கும் பிரியமானதாயிற்றே. இதைக்கூடச் செய்யவில்லையே காமராஜர், அது ஏன்?

அது அவருடைய பதவியால் ஏற்பட்ட நிலைமை.

இப்போதெல்லாம் அவர் கோயில் கோயிலாகச் சென்று தரிசிக்கிறாரே, அவர் ஏதோ வீரதீர மிக்க சுயமரியாதைக்காரர் என்று பேசப்பட்டதே. இப்போது அவர் போக்கு இவ்விதம் இருக்கிறதே; அது ஏன்?

அது அவருடைய பக்தி அல்ல, யுக்தி!

காங்கிரஸ் கட்சியின் கஷ்ட திசையில் கண்ணெடுத்தும் பாராதிருந்தவர்களை எல்லாம் இப்போது கட்டிப் பிடித்திழுத்துக் கொஞ்சுகிறாரே, அது ஏன்?

அது அவருடைய இராஜதந்திரம்!

ஆகட்டும், பார்ப்போம், அதற்கென்ன, கவனிக்கிறேன், என்றே எப்போதும் எதற்கும் கூறிக்கொண்டு காலத்தை ஓட்டுகிறாரே. அது ஏன்?

அது அவருக்கு ம மந்திரம்.

இதுபோலத் தம்பி, காமராஜர் செய்கிற ஒவ்வொன்றுக்கும், செய்யத் தவறுகின்ற ஒவ்வொரு கட்டத்துக்கும், விளக்கம் கனிவுடன் தரப்படுகிறது, காரணம் என்ன? பதிகத்தைப் படி, தம்பி, பதிகத்தைப் படி!

இராமர் பட எரிப்பு சம்பந்தமாக ஏற்பட்ட நிலைமைக்காக மட்டுமே, நான் இதனை எழுதவில்லை. பொதுவாகவே, மெள்ள மெள்ள ஆனால் ஆபத்தளிக்கும் அளவுக்கு வளர்ந்துள்ள விசித்திரமானதோர் அரசியல் நிலைமையைக் குறித்தே இதனை எழுதுகிறேன்.

அதற்குக் காரணம், இங்கு இத்தகையதோர், 'பாசவலை' வீசப்பட்டு அதிலே திராவிடரில் சிலர் சிக்கிக் கொண்டதனால் சிந்தை நொந்து கிடந்திட்ட நிலையில் நான், நாளிதழ்களைப் பார்க்கும்போது, வேறோர் இடத்தில், கொள்கைக்காக, கொண்ட திட்டத்துக்காக, பாசம் குறுக்கிட்டாலும், நேசக் கரம் நீட்டப்பட்டாலும், சொந்தம் பந்தம் பேசப்பட்டாலும், அடித்தாலும் அணைத்தாலும் அவரே எமது ஐயன்! என்ற போக்கிலே நடந்துகொள்ள மறுப்போர் உளர் என்பதைக் காண்கிறேன்; புன்னகையும் பெருமூச்சும் பிறக்கிறது.

திலகர் எனது மாபெருந் தலைவர்!

சிறுவனாக இருந்தபோது நான் அவரைக் காண ஓடியிருக்கிறேன்.

நாட்டு விடுதலை இயக்கத்தின் பிதா அவர்.

அவருக்கு நான் என் ஆழ்ந்த அஞ்சலியைச் செலுத்துகிறேன்.

நேரு பண்டிதர், உருக்கமாகத் திலகர் திருநாளில் இது போலப் பேசினார்—இலண்டனில்.

திலகரின் திருஉருவப் படத்தை அங்கு திறந்து வைத்து உலகின் பல்வேறு நாட்டுத் தலைவர்களும் கூடிய அவையிலே, திலகரின் பெருமையை எடுத்துக் கூறினார்.

நேரு பண்டிதருக்கு இன்று கிடைத்துள்ள செல்வாக்கு சாமான்யமானதல்ல.

அவருடைய பெயர் அறியாத பெருநகர் இல்லை!

அவர் நேசம் விரும்பாத நாடு இல்லை!

புகழேணியின் உச்சியில் வீற்றிருக்கிறார்,

அடுத்த படிக்கட்டிலே இவர், அதற்கு அடுத்ததில், இன்னவர் என்று கூடச் சுட்டிக் காட்ட முடியாதபடி, தனியானதோர் பீடத்தில் அமர்ந்து கொலுவிருக்கிறார்.

அப்படிப்பட்டவர், திலகர் திருநாளில், அஞ்சலி செலுத்துகிறார் என்றால், திலகர் பிறந்த திருநாட்டவர் எத்துணைப் பெருமையும் பூரிப்பும் கொள்வர்,

மராட்டியம் முழுவதும், எமது நாட்டுப் பெரியவரை, நானிலம் புகழும் நேரு பண்டிதர், இத்துணை பக்தியுடன் பெருமைப்படுத்திப் பேசியது கேட்டு எமது உள்ளமெலாம் உவகை பொங்கி எழுகிறது என்று தானே பேசுவர், மகிழ்வர்!

மகிழ்ச்சி அடையாமலில்லை, மராட்டியர்—ஆனால், அந்த மகிழ்ச்சியால் மயங்கி, பம்பாய் பறிபோகட்டும் என்று இருந்துவிடவில்லை.

பம்பாய் மராட்டியருக்குக் கிடைத்தாக வேண்டும்—அதனைத் தர மறுக்கும் நேருவை நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று இடிமுழக்கம் செய்கிறார்கள்.

நேரு—நம்மவரய்யா, நல்லவரய்யா—என்கிறார்கள்.

பம்பாய் எமது நகரம்—என்றுதான் மராட்டியர் முழக்கமிடுகிறார்கள்.

நேரு—திலகர் பெருமானிடம் எவ்வளவு பக்தி விசுவாசம் காட்டி இலண்டனில் பேசினார், தெரியுமா என்று கேட்டுப் பாசவலை விரிக்கிறார்கள்.

பார்த்தோம்—படித்தோம்—மகிழ்ந்தோம் — நன்றி கூறுகிறோம்—ஆனால் பம்பாய் எமக்குக் கிடைத்தாக வேண்டும் என்றுதான் மராட்டியம் கூறுகிறது.

# நம்மவரும் அல்ல-நல்லவரும் அல்லவே!

அடித்தாலும் அணைத்தாலும் அவரே எமது ஐயன்!—என்று அரசியலில் பதிகம் பாடவில்லை.

நமக்குப் பாடம் புகட்டத்தக்கதாக அமைந்திருப்பது மராட்டிய மக்களின் போக்கு மட்டுமல்ல.

திலகரின் பேரனுக்கு இல்லக் கிழத்தியாகியுள்ள அம்மையுமல்லரே, அரும்பாடம் புகட்டுகிருர்.

திலகரின் திருநாமம் வாழ்த்திவிட்டு அவர் திருஉருவப் படத்தை இலண்டன் மாநகரில் திறந்து வைத்துவிட்டு. இந்தச் செயல் கண்டு, சிந்தையில் மகிழ்வு கொண்டு. மன்னு வருக, மாவீரா வருக, அண்ணலே வருக! எமதருமைத் திலகரைப் போற்றிய ஏந்தலே வருக! என்றெல்லாம் குதூகலித்து அர்ச்சித்து, குறை மறந்து குளிர் முகம் காட்டி, கரும்புமொழி பேசிடுவர் மராட்டிய மக்கள்—பம்பாய் குறித்து எழுந்த குமுறலும் கொந்தளிப்பும் இருந்த இடம் தெரியாது போயிருக்கும் பவனியும் பாராட்டும் மெத்தவும் சிறப்புற இருக்கும், பாசம் காட்டுவர், நேசம் கோருவர், என்றெல்லாம் நேரு பண்டிதர் மனப்பால் குடித்திருக்க வேண்டும்—புனு கிளம்புகையில், எத்தனை எத்தனை தலைநகர்கள் வாழ்த்தி வரவேற்றன என்பது நித்த நித்தம் பத்தி பத்தியாக இதழ்களிலே, வெளிவந்ததே பார்த்திருப்பரே மராட்டியர்; இலண்டனும் பாரிசும், கெயிரோவும் பிரியோனியும், டமாஸ்கசும் ஏதன்சும், அயரும் பிறவும் அளித்திட்ட உபசார வைபவமும், படமாகிப் பளிச்சிட்டனவே பாராதிருந்திருப்பரோ மராட்டியர்; இத்துணை விழா கண்டவர், வருகிருர்; அதிலும் திலகர் பெருமானுக்குத் தண்டனிட்டுவிட்டு வருகிருர்; எனவே, பம்பாய் கிடைத்தாலென்ன பறிபோனுல்தானென்ன, பார் புகழும் பண்டிதரை நாமும் பாராட்டி வரவேற்போம், என்று மராட்டியர் புதுக்கோலம் கொள்வர், பாசவலையில் வீழ்வர் என்றெண்ணியபடிதான், புருவத்தை நெறித்திடாமல் புன்னகையை இழந்திடாமல், நேரு பண்டிதர் புனு வந்தார். அதே நாளில் தம்பி, பாசவலையில் வீழ்ந்து எமது உரிமையை இழந்திடவில்லை என்று அவரும் அகிலமும் உணரத்தக்க வகையில், திலகரின் பேரனுக்கு மனைவியாக வாய்த்துள்ள வனிதாமணி பம்பாய் மராட்டியருக்கே என்பதற்காக நடந்துவரும் அறப்போரில் ஈடுபட்டு, சத்தியாக்கிரகப் படையொன்றினுக்குத் தலைமைவகித்து நடாத்திச் சென்று கைது ஆகியிருக்கிருர்.

அறப்போர்த் தலைமைக்கு திலகரின் குடும்பத்தில் ஓர் திருவிளக்கு!

அறப்போர் நடந்த இடம், நெஞ்சை அள்ளுவதாக அமைந்திருக்கிறது, திலகர் சிலைக்கு முன்புறம்.

நேருவின் தீர்ப்பு நேர்மையானதல்ல, மராட்டியரின் உரிமையை அழித்திட முனைந்துள்ள நேரு பண்டிதர், மாவீரர் என்று போற்றப்படலாம், மானிலமுழுதும் அவர் நடந்து செல்லும் பாதையில் மலர் தூவி வரவேற்கப்படலாம், எனினும் எமக்கு அவர் இழைத்துள்ள மாபெருந் துரோகத்தை நாங்கள் மறவோம், பணியமாட்டோம் என்று கூறி அறப்போர் நடத்துகிருர் திலகர் திருமனையின் திருவாட்டியார், அவர் அஞ்சாநெஞ்சுடன் நடாத்தும் அறப்போர் நடைபெறும் இடத்திலே, வீரத்தின் சின்னமாய், விடுதலை வேட்கையின் பேருருவாய், தியாகத் திருவாய், திலகர் சிலை நிற்கிறது,

> ‘திலகரின் உருவச்சிலைக்கு சமீபத்தில் திலகரின் பேரனின் மனைவி இந்து திலகரின் தலைமையில் ஒரு ஸ்திரீகள் கோஷ்டியும் பல ஆண்களும் சத்யாக்கிரகம் செய்தனர்!''
>
> (சு. மித்திரன்)

பவனி நடத்தப்படுகிறது பண்டிதருக்கு; அதிகாரிகள் அச்சம் வெளியே தெரியாவண்ணம் பாவனைகாட்ட மெத்தச் சிரமப்பட்டிருக்க வேண்டும், ஏனெனில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி பம்பாயில் கூடிய போது கலாம் விளைந்தது தெரியுமல்லவா!

பண்டிதரின் பவனி நடந்து கொண்டிருக்கும்போது இந்து, பம்பாய் மராட்டியருக்கே, என்று முழக்கமிடுகிருர் பண்டித நேருவுக்கு ஜே! என்று அல்ல!

கிளர்ச்சியை ஒடுக்க, சர்க்கார் உங்களைக் கைது செய்யக்கூடும் தடியால் தாக்கக்கூடும்—அப்போதும் நீங்கள் காமராஜர் ஆட்சி ஒழிக, என்று கூவக்கூடாது அப்படிப்பட்ட நேரத்தில், ஆச்சாரியார் ஒழிக என்று வேண்டுமானுல் முழக்கமிடுங்கள், ஆனுல் மறந்தும் காமராஜர் ஆட்சி ஒழிக என்று கூவிவிடாதீர்கள்—காமராஜர் நம்மவர் ஆகவே நல்லவர்!—என்று இங்கு போதிக்கப்படுகிறது; அங்கு பூனுவில், பாசவலையில வீழ்ந்து விடமாட்டோம், பம்பாய் மராட்டியருக்கே என்று முழக்கமிட அறப்போர் நடாத்த சிறைப்பட, இந்து இருக்கிருர்! அன்றுமட்டும், புனுநகரில் மட்டும் 678—தொண்டர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்!

அடித்தாலும் அணைத்தாலும்அவரே எமது ஐயன் என்றுகொள்ள, தேஷ்முக் காட்கில் போன்ருரின் மனம் மட்டுமல்ல, மராட்டியப் பாமரனின் மனமே ஒப்பவில்லை

இந்திதான் தேசிய மொழியாகித் தீரும்—இதைத் தவிர்த்திட தடுத்திட முடியாது—கூடாது இதற்குத் தயாராகி விடுங்கள்-தகராறுவேண்டாம். இதோ பாருங்கள், நாணயங்களிலேயே இந்தி பொறித்தாகிவிட்டது-என்று சிண்டு பிடித்திழுத்துக் குட்டுகிறது டில்லி.

இராமர் பட எரிப்பும் இந்தித் திணிப்பு தடுப்பு முறைக் கிளர்ச்சிதான் என்பதைப் பெரியார் கூறுகிருர்.

பெரியாரின் பேராதரவினை எந்த நிலைமையிலும் பெற்றிடும் வாய்ப்பினைப் பெற்றுள்ள காமராஜர் இந்தப் பிரச்னை குறித்து என்ன கருதுகிருர்? காமராஜர் நம்மவர் அவருக்கும் இந்த இந்திச் சனியன்பிடிக்காது; எதிர்க்கிருர் என்று கூறி, பாசம் கொள்ளத் தக்க விதத்திலா? இல்லை தம்பி, இல்லை. பொறுக்குமணிகளை உதிர்க்கிருர். இதிலென்ன வாதம் சமாதானம். இதுதான் தேசியத் திட்டம் என்று சுடச்சுடப் பேசுகிருர். இருந்தாலும், அவர் நம்மவர் ஆகவே நல்லவர், என்று பாசவலையில் வீழ்ந்தோர் பேசுவது கேட்கிருேம்,

இந்தி ஒழிக, இந்தியைப் புகுத்தும் டில்லி அடியோடு ஒழிக! என்று பொறிபறக்க முழக்கமிட்டுவிட்டு, கனிவுடன் குழைந்த குரலிலாவது இந்திக்கு உடந்தையாக இருக்கும் காமராஜர் திருந்துக. என்ருவது கூறக்கூடாதா, என்று இந்தப் பாழும் மனம் கேட்கிறது. கப்சிப் காமராஜருக்குச் சங்கடம் உண்டாக்கக்கூடாது, என்று கட்டளை பிறந்துவிடுகிறது.

இந்தி ஒழிப்புக்காக நாம் நமது கடமையைச் செய்வோம்,

# கிடைத்தவேலை, தயவாலா, தகுதியாலா?

இந்தி திணிப்புக்காக நமது காமராஜர் அவருடைய கடமையைச் செய்கிறார்.

நமது முயற்சி அவருடைய நடவடிக்கையால், முறிந்துவிடுகிறது என்பதாலே, நீங்கள் அவர் மீது கோபப்படாதீர்கள்; அவர் நம்மவர் ஆகவே நல்லவர்!— என்று வாதாடப்படுகிறது.

இந்தி ஒழியத்தான் வேண்டும். இந்தியப் பேரரசு முறை ஒழிந்தாக வேண்டும். ஆனால் இந்தி திணிப்புக்கும், இந்தியப் பேரரசு முறைக்கும் பக்கபலமாக இருக்கும் காமராஜர் ஆட்சி மீது மட்டும் 'தும்பு தூசு, விழப்படாது! என்கிறார்களே, தம்பி, இந்தப் போக்கை என்னாலே புரிந்துகொள்ளவே முடியவில்லை! உனக்குப் புரிகிறதா?

ராஜரத்தினம்
அப்பாதுரை
சுந்தரவடிவேலு

என்று ஏதேதோ பெயர்களைக் காட்டி இவர்கட்கெல்லாம் உத்தியோக உயர்வு தந்த உத்தமரையா எதிர்ப்பது? ஒரு துளி நன்றி காட்டும் போக்குமா தமிழா! தோழா! திராவிடா!! உனக்கு இல்லாமற்போய்விட்டது என்று இடித்திடித்துக் கேட்கிறார்கள்.

இந்தப் பெரியவர்கள் ஏதோ இப்போது இவர்கள் வகிக்கும் வேலைகளுக்கு அருகதையே அற்றவர்கள் போலவும் ஆறேழு மந்திரி சபைகளின் போதெல்லாம் தவங்கிடந்து வரம் கிடைக்காமல் இவர்கள் தவியாய்த் தவித்தது போலவும், காமராஜர் இவர்களை எங்கோ கிடக்கிறார்களே பாவம் என்று இன்முகம் காட்டி தூக்கி உயர உட்காரவைத்தது போலவும் பேசுவது இவர்களை மரியாதையாக நடத்தப்படுவதாகவே எனக்குத் தோன்றவில்லை.

இவர்களுக்கெல்லாம் உத்யோகம் கொடுத்தார், கொடுத்தார், என்று பேசப் பேச, பொதுமக்கள் இவர்கள் இந்த உத்யோகங்களுக்கே தகுதி இல்லைபோலும், காமராஜர் தயவினாலேமட்டுமே இவர்கள் இவ்வளவு பெரிய உத்தியோகம் பெற்றார்கள்போலும் என்றெண்ணிக் கொள்ளக்கூட இடமளிக்கிறது. நான், உள்ளபடி அவர்கள்பால் சிறிது பச்சாதாபப்படுகிறேன். அவர்களுடைய 'பெயர்' காரணமற்ற முறையில், 'அடிக்கடி அடிபடுகிறது—ஒரு 'அரசியல் கூட்டு விளக்கத்துக்காகவே இவர்களின் பெயர் பயன்படுத்தப்படுகிறது.

காமராஜர் செய்த இந்தக் காரியத்துக்காகவே, அவருடைய

வடநாட்டு ஆதிக்கத்துக்கு உடந்தையாக இருப்பது.
இந்தி திணிப்புக்கு வழி செய்து கொடுப்பது.
தமிழ் உரிமைக் குலைப்பவருக்குத் துணை நிற்பது.

போன்ற போக்கை மறந்து அவருடைய புகழ் பாடிட, மனம் இடம் தரவில்லை. பெம்மானின் பெருமை கேளாய் என்று பதிகம் பாடுகிறார்கள், நான் என்ன செய்வது.

தம்பி, மராட்டியருக்கு நேரு பண்டிதரின் சீரிய குணம், சிறந்த பண்பு நாட்டுக்கு அவராற்றிய தொண்டு நானிலத்தில் அவருக்கு வளர்ந்து வரும் புகழ் இவை தெரியாமலில்லை—எனினும், பம்பாய் மராட்டியருக்கு என்று அவர்கள் கூறாமலில்லை.

தேவிகுளம் பீர்மேடு தமிழநக்கு என்றுகூட நாம் முழக்கமிட முடியவில்லை — குளமாவது மேடாவது என்கிறார் குணவான், அவருடைய ஆட்சியை எதிர்க்க இந்தப் "பசங்கள்" கூப்பாடு போடுகிறார்கள்—தள்ளுங்கள் குப்பையிலே—தங்கமானவர் காமராஜர்,—என்று பாசம் பேசப்படுகிறது.

உரிமையை இழக்கமாட்டோம்! மாபெருந் தலைவரே! எமது மண்டலம் வருகிறீர், இந்தச் சமயம் எமது மனப்போக்கை அறிந்துகொள்ளும்! பம்பாய் மராட்டியருக்கு என்பது எமது உரிமை முழக்கம்! இதை மறுக்கிறீர். உமது பேச்சை ஏற்க மறுக்கிறோம்! உமக்கு அளிக்கப்பட இருக்கும் வரவேற்பில் நாங்கள் கலந்துகொள்ளப் போவதில்லை. மராட்டியர் தொடுத்துள்ள அறப்போரில், நாங்கள் பணியாற்றுவது என்று சூளுரைக்கிறோம், அறிக! என்று புனா பல்கலைக் கழக மாணவர்கள் நேருபண்டிதரின் விஜயத்தின்போது முடங்கல் விடுத்தனர்.

நேருபண்டிதர் பேச வருகிறார், மராட்டிய மக்களே நெருப்பென்று கருதுங்கள் அந்தக் கூட்டத்தை, அங்கு செல்லாதீர், கூடுவோம் வேறோர் இடத்தில் உரிமை முழக்கமிடுவோம், வாரீர்—என்று அழைப்பு விடுத்தனர், மராட்டிய விடுதலைக் கிளர்ச்சிக் குழுவினர்,

சாந்தம் சீலம் போதிப்பவர், சமர் தவிர்ப்பவர், சமரசத் தூதுவர் என்று நாடு பல கொண்டாடும் நேரு வருகிறார், மராட்டியத்திலே ஒருபுறம் மாணவர்கள் மடலனுப்பி உரிமை முழக்கமிடுகிறார்கள், மாதர் படை திரண்டெழுந்து சிறைக்கோட்டம் செல்கிறது, மக்களின் அணிவகுப்பு, வேறோர் பக்கம் காணப்படுகிறது.

நேரு பண்டிதரால், மராட்டியர்மீது பாசவலை வீச முடியவில்லை.

பாசவலையில் வீழ்ந்திட மராட்டியம் மறுக்கிறது.

எப்படிப்பட்ட மராட்டியம் தெரியுமா, தம்பி! நேருவை பொன்னார் மேனியனே! புவியாளப் பிறந்தவனே! மன்னா, மாணிக்கமே! மலர் தூவித் தொழுதிடுவோம்—என்று அன்பு பொழிந்து வரவேற்ற மராட்டியம்தான்! எனினும், தங்கள் உரிமை மதிக்கப்படவில்லை என்று அறிந்ததும் அவர்கள் உள்ளம் குமுறுகிறது, பாசவலையை அறுத்தெறிந்துவிட்டு, போர்க்கோலம் பூண்டெழுகிறார்கள்.

அடித்தாலும் அணைத்தாலும், அவரன்றோ நமது ஐயன் என்று பாடி, மக்களின் உரிமை பறிபோகும் பாழ் நிலையை உண்டாக்காமலிருக்கும், அந்த உத்தமர்களை நெஞ்சில் நிறுத்தி, பாசம் குறுக்கிட்டாலும், நாம் நமது கொள்கை வெற்றிகான பாதையை இழந்து விடாதிருக்கும் பயிற்சியில் வெற்றி பெற்றாக வேண்டும்.

உன்னாலே அது முடியும் என்று உறுதியாக நான் நம்புவதனால்தான் யார் எவ்வழி சென்றாலும், நாம் கொள்கை வழி சென்றாகவேண்டும் என்பதில் ஆர்வம் பெறுகிறேன்.

அண்ணன்,

அண்ணாதுரை

(5—8—56 திராவிட நாடு இதழில்)

# இருதயத்தில் ஓர் ரோஜா

## முல்லை. சக்தி

[7]

ஆனந்த் தன் தந்தைக்குக் கடிதம் எழுதிக் கொண்டிருந்தான். தினசரி அவன் தனது தந்தைக்குக் கடிதம் எழுதுவது வழக்கம். அது சிறு வயதிலிருந்தே ஏற்பட்ட பழக்கம். கடிதம் எழுதும்போது, தன் தந்தையுடன் நேரில் பேசுவது போன்ற பிரமை ஏற்படும் அவனுக்கு. அவனின் தந்தைக்கும் அப்படியே. ஒருநாள் கடிதம் வரவில்லை என்றால் தந்தி கொடுத்துவிடுவார். ஏன் கடிதம் எழுதவில்லை — உடம்புக்கு என்னவென்று!

ஆகவே தந்தைக்குக் கடிதம் எழுதுவதை அவன் ஒரு கடமையாகவே கொண்டு நிறைவேற்றி வந்தான்! தினசரி கடிதம் எழுத வேண்டுமென்றால் விஷயம் வேண்டுமே! அதற்காக அன்றாடம் கல்லூரியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை —படித்த பாடங்களை— ஏன் பார்த்த படங்களைப்பற்றிக்கூட எழுதுவான்! இதுவரையில் அவன் எதையும் தன் தந்தையிடத்தில் மறைத்ததில்லை. ஆனால் இன்று......கடிதம் எழுதி முடிக்கவே மிகவும் சிரமப்பட்டான். ஏனென்றால் அவனது வாழ்க்கையில்முதன் முறையாகத் தனது தந்தையிடத்தில் தனது இதயத்தை மறைத்துக்கொண்டு எழுதுகிறான் அல்லவா? அதனால்தான்! அவன் மனம்மட்டும் குற்றம் சுமத்தியது — தந்தையிடத்தில் பொய் சொல்கிறாயே என்று! ஆனால் உண்மையை எழுதவும் அவனுக்குத்துணிவில்லை. என்ன செய்வான்?

எப்படியோ கடிதத்தை முடித்து அஞ்சல் பெட்டியில் சேர்ப்பித்துவிட்டுத்திரும்பும்போது 'சார் கொஞ்சம் பேனா கொடுக்கிறீர்களா?' என்ற குரலைக்கேட்டுத்திரும்பினான். அவள்......அவளேதான்...! அவன் மீண்டும் பார்க்கத் துடித்துக்கொண்டிருந்த பாவையேதான்! இதே போல் பேனாக் கேட்டு வாங்கியவள்தான்! அதனால் ஏற்பட்ட விளைவுகள்...எல்லாமே அவன் நினைவுக்கு வந்தன!

அவளும் அவனை அடையாளம் புரிந்துக்கொண்டாள்! 'மன்னிக்க வேண்டும்...அன்றொரு நாள் உங்களிடத்தில் வாங்கிய பேனா...நான் திருப்பிக் கொடுப்பதற்குள் நீங்கள் போய்விட்டீர்கள்...அதுஎங்கேயோ காணாமல் போய்விட்டது...என்னைதயை செய்து மன்னியுங்கள்' என்றாள்!

"அந்தப் பேனா எங்கேயும் போய் விடவில்லை. சொந்தக்காரனையே தேடித் திரும்பி வந்துவிட்டது" என்று கூறி பேனாவைக் கொடுத்தான் ஆனந்த்!

"அப்படியா?" ஆச்சரியத்தால் அவளது முகமண்டலம் விரிந்தது!

"ஆமாம் ... பெரும் உழைப்பின் சின்னம் இந்த பேனா...அவ்வளவு சீக்கிரம் அது என்னை விட்டுப் போய்விடாது...?" என்றான் அவன்!

"எப்படியோ அது உங்களிடம் திரும்பி வந்துவிட்டதே அதுவரை எனக்கு மெத்த மகிழ்ச்சி!"

இருவருமேநடந்துமுடிந்த சோகச் சம்பவத்தை நினைவுகூற விரும்பவில்லை!

"கடிதம் எழுதிப் போட்டுவிட்டு வருகிறேன். போய்விடாதீர்கள்" என்று கூறியவண்ணம் அவள் கடிதத்தை அவசர அவசரமாக எழுத ஆரம்பித்தாள்!

அவனது விழிகள் அவளது அழகை அள்ளிப்பருகிக்கொண்டிருந்தன! அவள் எழுதும்போது அவளது முகமண்டலத்தில் தோன்றிய பாவங்கள் — அவளது உடலின் அசைவுகள் எல்லாமே இனித்தன அவனுக்கு!

பேனாவைத் திருப்பிக் கொடுத்துக் கொண்டே, 'Thanks' என்றாள்!

'பரவாயில்லை' என்று கூறி பேனாவை பெற்றுக் கொண்ட ஆனந்த், அவளது முகத்தில் பதிந்திருந்ததனது விழிகளைத்திருப்ப இயலாமல் தத்தளித்தான்!

"என்ன அப்படிப் பார்க்கின்றீர்கள்?"

"உங்க முக மண்டலம் முழுவதும் சோக மேகம் சூழ்ந்துக் கொண்டிருக்கிறதே...ஏன் என்று நான் அறிந்துக் கொள்ளலாமா?"

"ஓ..."

அவளது கண்கள் பனித்தன!

"மன்னிக்கவும்...நான் ஏதாவது தவறாகக் கேட்டுவிட்டேனா...!"

"இல்லை...இல்லை..." முந்தானையின் தலைப்பால் அவள் தனது விழிக்குளத்தை துடைத்துக்கொண்டாள்!

"எனது தாத்தா தவறிவிட்டார். எனக்கிருந்த ஒரே பற்றுக் கோல் அவர்தான். நான் இப்போது ஒரு அனாதை!"

துக்கம் அவளது தொண்டையை அடைத்துக் கொண்டது கண்களில் கங்கையும் காவேரியும் குபுகுபுவென்று பாய்ந்தன!

"Oh! I am so sorry......என்ன செய்வது ஆண்டவன் இப்படித்தான் சில நேரங்களில் நம்மை சோதனையில் ஆழ்த்திவிடுகிறான். என்னால் உங்களுக்கு ஏதாவது உதவ முடியுமென்றால் அதனைச் செய்ய சித்தமாக இருக்கிறேன்! தவறாக நினைக்காதீர்கள்...முன்பின் தெரியாத ஒருவன் இப்படிக்கேட்கிறானே என்று!"

"No...No...என்னுடைய தாத்தாவின் எஜமானர் எனக்கு எல்லா சவுகரியங்களையும் செய்து தந்திருக்கிறார். மனிதாபிமானம் மிக்க ஒரு நல்லவர் அவர்!"

"அப்படியா...மிக்க சந்தோஷம்... உங்கள் பெயர்..."

"லட்சுமி...உங்கள் பெயர்தான் எனக்குத் தெரியுமே...!"

''அப்படியா...அவ்வளவு நினைவில் வைத்துக் கொண்டிருக்கிறீர்களா?''

''மறக்க முடியாமல்தான் அந்த பேனா செய்து விட்டதே...!''

இருவருமே சிரித்தனர்!

'என்னுடன் ஒரு கப் காப்பி சாப்பிட வருகிறீர்களா?'' என்றுதயங்கிக் கேட்டான்!

அவளும் ஒரு கணம் தயங்கிய பின் ஓ என்றாள்!

அந்த விடுதியின் ஜுக்—பாக்ஸ் பாடல் ஒன்றை அலறிக் கொண்டிருந்தது!

ஆனந்தும்—லட்சுமியும் காபியை சுவைத்துக் கொண்டிருந்தனர்!

தன்னுடையைஇதயத்தின் அடித்தளத்தில் எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டிருந்த வட்ட நிலாவை—தன்னுடைய இதயத்தில் பதிந்து விட்ட அந்த பொற்சிலையை—மீண்டும் அவளை சந்திப்போமா—சந்தித்தாலும் பேசும் சந்தர்ப்பம் கிடைக்குமாஎன்றுஏங்கித் தவித்துக் கொண்டிருந்த சிங்காரியை—மீண்டும்சந்தித்ததோடில்லாமல் அவளுடன் சேர்ந்து காப்பி பருகுவதில் ஆனந்த் மெத்த மகிழ்ச்சி கொண்டான்!

நாள் முழுவதும் கவலை சூழ்ந்து இருந்து கொண்டிருக்கும் எனக்கு சில நிமிட நேரமாவது ஆனந்தத்தைத் தருகிறாரே இவர் என்ற நினைப்பு லட்சுமிக்கு!

இருவருக்குமே ஒரு இனம் தெரியாத மகிழ்ச்சி உள்ளத்தில் பூரித்துக் கொண்டிருந்தது!

'காலம் முழுவதும் இந்தக் கன்னியுடனே நமது வாழ்க்கை பின்னிக் கொண்டால் எவ்வளவு இன்பமாக இருக்கும்! என்று அவன் எண்ணினான்!

''கொழு கொம்பு இல்லாமல் தவிக்கும் எனக்கு இந்தக் கொம்புக் கிடைத்தால் என் வாழ்க்கைக் கொடியைப்படர விடலாமே...அவர் எனக்குக் கிட்டுவாரா?'' என்று அவளது எண்ணம் சஞ்சரித்துக் கொண்டிருந்தது!

ஒருவர் விழியை ஒருவர் சந்திக்கும்போது அவர்களது தலைகள் நாணத்தால் குனிந்தன! அது அன்பு அரும்புவதின் அறிகுறி அல்லவா? அப்படி என்றால்...அவர்கள் இதயத்தில் அன்பு அரும்புகிறதா...?

'என்ன எதுவே பேசாமல் சிந்தித்துக் கொண்டிருக்கிறீர்களே?' என்று அசடு வழியக் கேட்டான் ஆனந்த்!

'மீண்டும் உங்களை சந்திப்பேன்... இப்படி உட்கார்ந்து பேசுவேன் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை' என்றாள் லட்சுமி!

'நான்கூட எதிர்பார்க்கவில்லை... ஆனால்'

'ஆனால்...'

'உங்களை மீண்டும எப்படியாவது சந்திக்கவேண்டுமென்று விரும்பினேன்...'

'என் பேனாவைப் பற்றிக் கேட்கவா...?'

'இல்லை. வேறு ஒரு காரணமும் இருந்தது...!'

'என்னவோ...?'

'சொல்லதான் வேண்டுமோ?'

'சொன்னால்தானே புரியும்...'

'சொன்னால் கோபிக்க மாட்டீர்களே...உங்கள் முகம் என் நினைவை விட்டு மறையவில்லை என் கனவிலும் நினைவிலும் நீங்கள் சதிராடிக் கொண்டே இருந்தீர்கள்.'

ஆயிரம் ஆயிரம் மலர்கள் அவளது இதயத்தில் மலர்ந்தன. குயில் கூவியது; மயில் ஆடியது!

நாணத்தால் அவள் முகம் சிவந்தது. நெற்கதிர்போல் அவள் தலை குனிந்தது!

''அவ்வளவு பாக்கியசாலியா?'' என்றாள் லட்சுமி!

'நானல்லவா அதிர்ஷ்டம் செய்திருக்க வேண்டும் இந்த அழகியின் அன்பைப் பெற.'

அப்போது ஜுக்பாக்சிலிருந்து 'ராஜாவின் பார்வை ராணியின் பக்கம்' என்ற பாடல் ஒலித்தது!

இருவரின் பார்வையும் கலந்தது. இரு இதயங்களும் கலந்தன. இரு அன்பின் நதிகள் சங்கமமாயின!

இந்தக் காட்சியை இரண்டு பொறாமைக் கண்கள் பார்த்துக் கொண்டிருக்கின்றன என்பதை அறியாமல் அவர்கள் ஒரு உல்லாச புரியில் மிதந்துக் கொண்டிருந்தனர்!

அந்த கண்களுக்கு சொந்தக்காரியான ஜோதி தனது கையிலிருந்த ஸ்டாவைக்கசக்கிஎறிந்தாள்! அவள் விட்டபெருமூச்சு சர்ப்பம்சீறுவதைப் போல் இருந்தது!




## அண்ணா எங்கே?



ஆர்க்கின்ற பெருங்கடலே அமைதி யாகி
ஆண்டிருந்த மாநகருள் நுழைந்தாற் போல
பார்க்கின்ற இடமெல்லாம் மக்கள் வெள்ளம்
பார்மீதில் எங்கனுமே பார்த்த தில்லை
வேர்க்கின்றார், அழுகின்றார், விம்மி விம்மி
வீழ்கின்றார் நெடுந்தரையில் 'அண்ணா' என்றே
சேர்க்கின்றார் அழுகுரலாம் அலையின் ஓசை!
செந்தமிழர் நெஞ்சமர்ந்த அண்ணா எங்கே?

ஒலமிடும் கடலருகே மாலை வீட்டில்
ஓய்வெடுத்து வருகின்றார் நமது அண்ணன்!
நூலறிவும் நுண்ணறிவும் நிறையப் பெற்று
நுவன்றிடவே இயலாத செயல்க ளாற்றி
மேல்நாடும் கீழ்நாடும் போற்றும் வண்ணம்
மேலான வாழ்வடைந்து புகழிற் போந்தார்.
நூலறுந்த காற்றாடி நிலையி லானோம்
நொந்தமனம் தேற்றிடவே அண்ணா எங்கே?

—பி. வி. ஆர். பாண்டியன்

# கண்ணீர் மாலை

மணிவண்டைக் காதலிக்கும் மலரும், தண்ணீர்
மடிமீது மிதக்கின்ற குமிழும், பார்க்கும்
துணைவிழியைக் கவருகின்ற வான வில்லும்
தேங்கியுள்ள புகைமுகிலும், காலைப் போது
மணமலரில் தெளிக்கின்ற பனிநீர் முத்தும்
மயங்கவைக்கும் எழிலோடு பொலிந்திட் டாலும்
கணத்தினிலே அழிந்துவிடும், மறைந்து போகும்
காசினியில் இதுபோல்தான் மனித வாழ்வும்!

நெறிநின்று வாழாதார் மனித ராக
நிதம்வாழ்ந்த போதுமவர் மரண முற்றால்
மறைந்துவிடும் அவர்நினைவு, ஆனால் நித்தம்
மற்றவரின் நலன்கருதி வாழ்ந்தார் செத்தால்
சிறப்பாக மனஉலகில் நிலைத்து நிற்பர்!
சிலநாளில் மறைந்துவிடும் திரைப்ப டத்தால்
அறிமுகமா கும்பாடல் புகழ்பெற் றாலும்;
அப்படியா தேய்ந்துவிடும் குறளின் பாடல்

சீலமிகு அன்புணர்வால் நாட்டி லெங்கும்
சிறப்பார்ந்து வாழ்ந்தவர்தான் நமது அண்ணா!
ஞாலமென்ற குடிலினிலே நிலைந்து நின்று
ஞானவொளி வழங்கிவந்த விளக்கே அண்ணா!
ஓலமிட்டுக் கதறிமனம் கண்ணீர் சிந்த
உதறிவிட்டு நமையெல்லாம் மறைந்து போனார்
காலமென்னும் புயற்காற்றில் சேவை தீபம்
குலைந்தணைந்த அவலத்தை என்ன வென்போம்

காலையிலே கண்மலரும் பூவைத் தேடி
குதுகலத்தால் ஓடிவரும் வண்டைப் போன்று
மேலைநாட்டுத் தலைவரெல்லாம் நமது அண்ணா
மொழிகின்ற கருத்துகளைக் கேட்க வந்தார்
மூலைவீட்டுச் சிறுவிளக்காய் எரிந்தி டாமல்
முழுநிலவின் வெளிச்சமென ஒளிர்ந்து வாழ்ந்தார்
தாலியினை பறிகொடுத்த கற்புப் பெண்போல்
தமிழ்நாடே துடிக்கிறது கண்ணீர் சிந்தி!

புகைமனிதர்வதிகின்ற நாட்டில், தண்ணீர்
பொழிகின்ற மேகமென வாழ்ந்தி ருந்தார்
பகைஇருளில் தடுமாறும் மாந்த ருக்குப்
பாதையென அவர்அமைந்தார் அன்பைக் காட்டி
அகம்முழுதும் சாந்தமின்றி, போர்க்கு ணத்தை
அணுவளவும் கொள்ளாத தலைவன், இந்த
இகம்ழுழுதும் தெரிகின்ற வானம் போன்றே
எல்லோரும் அறிந்திடவே வாழ்ந்த மேதை!

உதிரட்டும் கருகட்டும் பூக்கள், யாரும்
உழல்வதில்லை அழல்துயரில் எந்த நாளும்;
சிதறட்டும் வீழட்டும் விண்மீன் அந்த
செயலாலே வருந்திடுவார் எவரு மில்லை;
புதுநிலவு பெயர்ந்தழிந்தால் துடிது டித்துப்
பதறாமல் இருப்பாரும் உண்டோ நாட்டில்?
இதுபோலே அண்ணாவின் மறைவை எண்ணி
இதயத்தால் கலங்காதார் யாரும் இல்லை!

சிலைஇல்லா ஆலயம்போல் அண்ணா இன்றி
சிறப்பிழந்து மதிப்பிழந்து நமது நாடு
நிலைமாறி நெறிமாறித் துடுப்பொ டிந்த
நதிப்படகைப் போல்தவிக்கும் அவலம் என்னே!
அலையாக மோதுகின்ற துயரத் தாலே
அன்றாடம் குமைகின்றோம் அவரை எண்ணி!
இலைஇருந்து என்னபயன் கொடியில்; பூவின்
எழில் இல்லை, மணம்இல்லை கவர்ச்சி இல்லை!

பூக்கின்ற மலரெல்லாம் அழகென் றாலும்
பலநாட்கள் நிலைப்பதில்லை காய்ந்து போகும்;
ஊக்கமொடு அதனாலே தொடுத்த மாலை
காணிக்கை இட்டாலும் பயனே இல்லை;
நோக்காடு கொண்டுமனம் சிந்து கின்ற
நீலவிழி கண்ணீரே அழியா பூக்கள்
சாக்காட்டில் கலந்துவிட்ட அண்ணா விற்குச்
சமர்ப்பிப்போம் கண்ணீரால் தொடுத்த மாலை.

—துறவி

# தலைவா, வாழி!

தமிழ்க்கடலே! நேர்மைஎனும் தந்தை பெற்ற
தலைமகனே! வெண்முத்தே! எம்மை யெல்லாம்
குமிழ்சிரிப்பால் சிறைகொண்ட கொள்கைக் குன்றே!
கோலோச்சும் பெம்மானே! அறிஞ ரேறே!
அமிழ்தூற்றே! தமிழன்னை உன்னா லன்றோ
அரியணையில் கொலுவிருக்கக் கண்டோம்; இந்த
தமிழ்நாடு— ஏனிந்த தரணி எல்லாம்
தவப்புதல்வர் எனப்போற்றத் துணியும் ஓர்நாள்!

முற்றிவிட்ட நெற்கதிரோ நிலத்தை நோக்கும்
முழுமதியாள் தலைகவிழ்வாள் நாணம் கொண்டால்
கற்றறிந்தாய் பலபொருளும் ஆனால் சற்றும்
கர்வத்தை உன்னிடத்துக் கண்டோ மில்லை

சுற்றத்தார்— அயலார்கள் என்னும் பேதம்
சிறிதேனும் உன்னுளத்தில் இல்லை;—அந்த
பெற்றியினை எண்ணுங்கால் பனிக்கும் கண்கள்
பெருந்தலைவா உம்பிரிவை மறத்தல் ஆமோ!

உலகுக்கே உத்தமனாம் காந்தி அண்ணல்
ஒன்றிரண்டு துறைகளிலே மிளிரக் கண்டோம்
பலகற்று நாட்டிலுள துறைகள் எல்லாம்
பட்டொளிரும் பான்மையினை உன்னில் கண்டோம்
கலைத்துறையில் அரசியலில் இலக்கி யத்தில்
கற்றோரும் மற்றோரும் வியக்கும் வண்ணம்
நிலமகள்போல் பொறுமையினால் அடக்கப் பண்பால்
நெஞ்சத்தில் குடிகொண்டு மறைந்தாய் அந்தோ!

—சாந்தி

# வழிகாட்டியின் பிழை

ராஜன்புத்திரன்



சிவகாமியின் கால்கள் தயக்கத்தால் நகர மறுத்தன. எத்தனை தடவை அந்த அறையினுள் போய் வெளியே வந்திருக்கிருள். அப்பொழுதெல்லாம் இல்லாத தயக்கம் இன்று ஏன் வந்தது. இது அவளுக்குப் புதிராகவும் புரியாததாகவும் இருந்தது.

அறையின் உள்ளே இருமும் சப்தமும் மரண வேதனையின் ஒலியும் மங்கலான வாழ்வின் கடைசி பச்சைக் கொடி காட்டும் குறிப்பும் புரிந்துவிட்டன.

புனர்ஜென்மம் என்று சொல்வார்களே அந்த ஜென்மம் அறையினுள்ளே ஆறு மாதகாலமாகப் படுத்துக்கிடக்கும் அவளுடைய கணவனுக்குக் கிடைக்க வழியிருந்தால், அவள் சுமங்கலிதான். இந்த பந்தம் ஊருக்குத்தானே தவிர அவளுக்கு அல்ல என்பது வெள்ளிடைமலையான உண்மை.

லேசாக ஒருக்களித்து வைத்திருந்த அறையின் கதவை சற்றுத் தள்ளி உள்ளே எட்டிப் பார்த்தாள் சிவகாமி.

சருகாகிப்போன உடம்பு. இருமி இருமி விலா எலும்புகள் புடைத்துப் போய் வெளியே துருத்திக் கொண்டிருக்கும் அமைப்பு ஒட்டிப்போன கன்னங்கள், குழி விழுந்த கண்கள், அதில் இன்னும் வசீகரம் குறையாமல் தீர்க்கம் குடி கொண்டிருந்தது.

கல்லூரியில் படிக்கும்போது இந்த தீர்க்கமான இரண்டு கண்களுக்கு அவளுடைய மனதை இளகிய பாகாக ஓடச்செய்த பெருமை உண்டு. புடம் போட்ட தங்கம் என்று சொல்வார்களே, அதே மாதிரியான குணம். இப்படி முதலில் அவளுடைய அபிப்பிராயம் இருந்ததால் அவரைக் காதலித்தாள் சிவகாமி.

இருபத்திரண்டு வயது வரை வளர்த்த தாய் தந்தையை விரோதம் செய்து கொண்டு கல்யாணமும் செய்து கொண்டாள்.

மூன்று ஆண்டுகள், அவளின் இன்பம் சுழல்ராட்டினமாய் சுற்றிச் சுற்றி வருகிறது.

கட்டிலில் கிடக்கும் அவருக்கு அன்போடு பணிவிடை செய்ய அவள் இன்றுகூட காத்திருக்கிருள். அவர் அதற்கு அனுமதிப்பதில்லை. அவளும் உரிமை கொண்டாடாமல் மூடுபனியாக மறைந்து நிற்கிருள்.

அவருடைய உயிர்த் துடிப்பு நின்று விட்டால் சிவகாமி அமங்கலி. அது அவளுக்கு சொல்லித் தெரிய வேண்டிய விஷயமில்லைதான். இருந்தும் சொல்ல இலவுலகில் ஆட்கள் மலிந்து கிடக்கிருர்களே!

வரிந்து கட்டிக்கொண்டு, வலுச் சண்டைக்குச் செல்லும் சில பெண் ஜென்மங்கள் உண்டல்லவா?

உண்டியும் உறவும் கொடுத்துவிட்டு, உழைக்க ஆண்கள் வெளியே சென்றபிறகு 'இது'கள் ஊர்வாயை மெல்லுவதற்கு ஒவ்வொரு இடமும் தேடித்திரிகின்றனவே, அந்த கும்பலின் நடுவில்தானே சிவகாமியும் வாழ்க்கையை ஆரம்பித்தாள்.

ஊடாடுகின்ற மனதிற்கு ஊர்வாயால்சாட்டைஅடி நிச்சயம் உண்டு. இந்த 'அடி'களால் ஏற்பட்ட தழும்பு சிவகாமியின் இதயத்தில் அழியவில்லை.

இரண்டு மாதம் ஆகியிருக்கும், இந்த இன்னலில் சிக்கிக் கொண்டு; அம்மன் படத்தின் முன்னல் சிவகாமி அழுதிருக்கிருள், அம்மன் அருள் பாலிக்கவில்லை.

வளர்கின்ற மரத்திற்கு வாடிப் போகும் பருவம் ஒன்று உண்டு. ஆனுல் அது மறுபடியும் துளிர்விடும் வசந்தகாலம் கூடவே வந்துவிடும். சிவகாமியின் வாழ்வில் வசந்தம் நிச்சயம் வரப்போவதில்லை. இதை அறுதியிட்டுக் கூறும் மனம் அவளுக்கு கடந்த மூன்று நாட்களுக்கு முன்பு ஏற்பட்டிருந்தது.

குடலைப்பிடுங்கி வெளி.யே தள்ளி விடும் இருமல் அவரை ஆட்கொண்டுவிட்டது என்று தோன்றியது. அப்படிப்பட்ட அவஸ்தையில் இப்போது அல்லல்பட்டுக் கொண்டிருந்தார்.

கட்டிலில் அந்த மெலிந்துபோன உடலை தூக்கிப்போடும் மரண அவஸ்தையைப் பார்க்கும்போது அவளுடை மனம் இளகியது.

பிடிவாதகுணம் சிலருக்குகூடவே பிறந்துவிடும், சிவகாமிக்கு கூடவே பிறக்காவிட்டாலும் நடுவில் அதற்கு அடிமையாகி விட்டிருந்தாள்,

அறையின்கதவைநன்ருகத்திறந்து விட்டாள். இது அவளையுமறியாமல் செய்துவிட்ட ஒரு செயல், இந்தச் செயலை கோழைத்தனம் என்று யாரும் கணக்கிட்டு விடாதீர்கள். இது பெண்மைக்குப் பாதுகாவலும், கௌரவமும் அளித்துவரும் ஜீவன் பிடி தளர்ந்து விடுமோ என்ற அச்சமே!

சாம்பலாகிப்போகும் இந்த உடலுக்கு எத்தனை கடுமையான மன உறுதி இருந்திட்டாலும், கணவன் என்ற சொல்லில் இவை அடிபட்டுப் போய்விடுகின்றன என்பது உண்மைதான். இதை அவளே ஒத்துக் கொள்ளும் மனச்சலனத்திற்கு வந்து விட்டிருந்தாள்.

கட்டிலின் அருகில் வந்து நின்ருள் சிவகாமி.

அவர் கண்களைத் திறந்து பார்த்தார். எதிரில் சிவகாமி நின்றிருப்பது, அவர் கண்களுக்கு மெல்லிய திரை மறைவில் தெரியும் உருவமாகத் தெரிந்தது.

பிரிந்துவிடத் தயாராக இருந்த உயிரை இவரே, கையில் பிடித்துக் கொண்டிருப்பதாக நினைத்துக் கொண்டு, 'உனக்காகவே இன்னும் சாகாமலிருக்கிறேன்'' என்று தன் பலம் முழுவதையும் பிரயோகித்து சப்தமாகக் கத்திஞர். இதனுல் அவரின் நிலை, மிகப் பரிதாபகரமாகப் போயிற்று.

விருட்டென்று கட்டிலின் விளிம்பில் அமர்ந்தவள், அவருடைய மார்பைத் தடவி விட்டாள்.

இது இதமாக இருந்தாலும், அதை மறுக்கவோ, அவளுடைய கரத்தை எடுத்துவிடவோ அவருக்குச் சக்தி இல்லை. இந்த இடை

வேளை நேரத்தை நன்கு பயன்படுத்திக்கொள்ள முடிவு எடுத்துக் கொண்டாள் சிவகாமி.

கலைந்துபோன போர்வையை எடுத்து உதறி போர்த்திவிட்டாள். தலையணைகளைச்சரியாக அமைத்துக் கொடுத்து அவருடைய தலையைத் தூக்கி அதன்மீது சாய்த்து விட்டாள்.

மூன்று நாட்களுக்கு முன்பு வாங்கிக் கொடுத்த டானிக்கை இன்னும் அவர் ஒருமுறைகூட அருந்தவில்லை என்று அதன் அளவு காட்டியது.

மேலே சுழலும் காற்றுடியை நிறுத்திவிட்டு, கீழேகிடந்த ஆரஞ்சுத் தோல்களையும் குப்பைகளையும் கூட்டி மூலையில் குவித்தாள். இந்த சமயத்தில் ஹாலிலுள்ள டெலிபோன் மணி அலறியது.

புடவைத் தலைப்பை இடுப்பில் செறுகிக் கொண்டவள் ஹாலுக்கு வந்து டெலிபோனை கையிலெடுத்து பேச ஆரம்பித்தாள்.

அன்று பிரம்மாண்டமான 'க்ளைமாக்ஸ்' செட், சில ஆயிரங்களால் முழுகிப் போன கஷ்டத்தில், பட முதலாளி பரந்தாமன் டெலிபோனில் அலறினுர்

இன்று கண்டிப்பாக படப்பிடிப்பில் கலந்து கொள்ளதன்னல் இயலாது என்று கடுமையாக போனில் பதில் சொன்னவள், ரிசீவரை டக்கென்று வைத்துவிட்டுத் திரும்பி அவர் படுத்திருக்கும் அறையைப் பார்த்தாள்.

அவருடைய மரண அவஸ்தை, அவளுடைய மனதை துக்கத்தால் பிசைந்தது.

என்னவோ பயங்கரம் நடக்கப் போகிறது என்று அவளுடைய உள்மனம் அடிக்கோடிட்டுக் காட்டியது.

'கலைக்காக நான் பிறந்திருக்கிறேன்' என்று சில 'பிரகிருதிகள்' சொல்வது உண்டு. வயிற்றைக் கழுவவே, கலையின் காலைப்பிடிப்பவர்கள், மெச்சத் தகுந்த வார்த்தை பேசிவிட்டதாக பேட்டி கொடுப்பார்கள். ஆனல் சிவகாமி உண்மையாகவே கலைக்காகவே பிறந்திருக்கிருள். கலை அவளை இருகரம் நீட்டி அழைத்தது.

கல்லூரி படித்து காதலித்து கல்யாணம் செய்து கொண்ட ஆறு மாதங்களில் இந்த அதிர்ஷ்டம் அவளை அணைத்தது, இதற்கு முக்கிய காரணம் அறையினுள் அவஸ்தைப்படும் அவரே!

அவருடைய நண்பர் பிரபல படக் கம்பெனி ஒன்றில் டைரக்டர். அவரின் ஒத்துழைப்பாலும், சிபாரிசாலும் கலையுலகம் புகுந்த சிவகாமி இன்று பல லட்சங்களுக்கும் பல பங்களாக்களுக்கும் சொந்தக்காரி.



செழிப்பான வாழ்க்கையை அமைத்துக் கொண்டதோடு, அல்லாமல் அவர் 'சந்தேகம்' என்னும் பயிரை கூடவே வளர்த்து வந்து கொண்டிருக்கிருர் அந்த சந்தேகம் ஒரு நாள் 'உண்மை' என்று தெரிந்து கொள்ளும் நல்ல சந்தர்ப்பம் அவருக்கு ஏற்பட்டது.

பட்டென்று சிவகாமியிடம்கேட்டு விட்டார். சிவகாமியின் நிலைமை மிகவும் பரிதாபகரமானது. அவளுடைய பதிலில். ஒருவித தயக்கம் குடிகொண்டிருந்தது. அதிலிருந்து அவளுடைய வாழ்வில் முறையற்ற திருப்பம் ஏற்பட்டது.

அவருடைய வாழ்விலும் சலிப்பு தட்டுப்பட்டது. எப்போதும் அமைதியை நாடிச் சென்றுகொண்டிருந்தார்.

அன்று ஏற்பட்டுள்ள அலைச்சலால், உடல் அசௌகரியம் உண்டாகி குலைநடுங்கும் இருமலால் அல்லல்படும் அவதிக்கு அவர் உள்ளாகிவிட்டார்.

கலை என்பது தாய்மையான இடத்திலிருந்து ஆரம்பித்தாலும் கள்ளத்தனமான எண்ணம், விபரீதமான ஆசை இவைகளால் அடிமைப்படுவது சினிமாக் கலையின் விதி! இது ஒரு சாபக்கேடு கூட!

திரைப்படங்களில், அதுவும் குடும்பப் பெண் நடிப்பது என்பதை—நாசூக்கான வார்த்தையில் சொல்ல தமிழ் மொழியில் வார்த்தைகள் இல்லைதான்.

கல்லூரி வரை கல்வி கற்று காதலால் மனம் பேதலித்து பெற்ருேரையும் உறவினர்களையும் வெறுத்து—அவருக்காகவே ஓடிவந்தவள்தானே சிவகாமி.

சூழ்நிலை அமைந்துவிட்டபோது, அதற்கு சூத்திரக் கயிருக அவரே முன்வந்து விட்டபோது, அவள் இதிலும் ஓடிவிட, முன்வரமாட்டாளா என்ன? இது அந்தப் பாதையில் செல்லும் எல்லா பெண்களுக்கும் வந்துவிடும் ஒரு ராஜபாட்டையாக அமையக் காரணம் வழிகாட்டியின் பிழைதான்.

திருமணமான புதிதில், அவளும் அவரும் சேர்த்துஎடுத்துக்கொண்ட நிழற் படம் சுவற்றில் மாட்டியிருப்பதைக் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள் சிவகாமி.

அப்போது, அவளுடைய முகம் ஒரு ஆத்மாவிற்காக இறைஞ்சின புனிதம் நிறைந்ததாகக் காட்சியளித்தது. ஆனல் இப்போதுள்ள முகத்தை அவளே கண்ணுடியில் பார்த்தாள். அந்தப் புனிதம் அழிந்துவிட்டது என்று அவளுக்கே தெரிந்துவிட்டது.

திரையில் தெரியும்போது அவளுடைய அரிதாரம் பூசிய முகம், அங்கே உட்கார்ந்திருக்கும் சில நூறு பேர்களுக்கு விருந்து. ஆனல் அந்த முகமே இப்போது அவளின் தன்னிச்சையால் துன்பப்படும் விஷமாக இருக்கிறது என்பதை சிவகாமி நினைத்தாள். அவருடைய உடல் ஆட்டம் கொடுத்தது.

அறையினுள்ளே அவருடைய குரல் ''அம்மா...'' என்று பெரிதாகக் கேட்டது. அது அவளுடைய சிந்தனை இழையை அறுத்தெறிந்தது.

விழுந்தடித்து ஓடி அறையினுள்ளே பிரவேசித்தாள். 'அவர்' உயிர் பிரிந்துவிட்டிருந்தது.

●

# வீடேறிப் போகவேண்டும்!

அன்புள்ள நண்பா!

தேர்தலிலே தில்லுமுல்லுகள் நடைபெறக்கூடும்; தேன்பாகுமொழியினரின் இனிப்புக்குரலில் திட்டங்களின் பயன்குறித்து — தித்திப்புச் சொட்டச் சொட்ட எடுத்துரைக்கப்படும்; நாயுடு முதலியாரைக் காட்டியும், முதலியார் செட்டியாரைக் காட்டியும், செட்டியார் செங்குந்தரைக் காட்டியும், செங்குந்தர் அய்யங்காரைக் காட்டியும், அய்யங்கார் ஐயரைக் காட்டியும், ஐயர் அகம்படியரைக் காட்டியும், அகம்படியர் கவுண்டரைக் காட்டியும், கவுண்டர் பொன்னம்பூண்டாரைக் காட்டியும், பொன்னம்பூண்டார் வாண்டையாரைக் காட்டவுமாக ஒருவரை ஒருவர் காட்டி, ஒருவருக்காக ஒருவர் என்று மேலே எடுத்துப் போட்டுக்கொண்டு ஓடி ஓடி பணிபுரிவார்கள்! பேழைகள் திறந்துவிடப்படும்—பெட்டிகள் குவித்துக் காட்டப்படும்; சாமபேத தானதண்ட வகைகள் அனைத்தும் சுருதி குறையாமல், சுவை மாறாமல் பயன்படுத்தப்படும்,

செங்கிஸ்கானுடைய வீரதீர பராக்கிரமத்தை எடுத்துச்சொல்லி, எதிர்த்தோர் இடுப்பொடிக்கப் பட்டுப்போவர். மதியாதோர் மண்மேடாக்கப்பட்டுப் போவர் என்றெல்லாம் அச்சுறுத்தி, அச்சமூட்டி அறுவடை செய்ய முனைவர்—காங்கிரசுக்காரர்கள்.

அதனால், நாம் நம் கொள்கை வழி நின்று இலட்சியப் பிடிப்போடு, போலித்தனமான எச்சரிக்கைகளை தீவாய்ப்படுத்திவிட்டு, அச்சுறுத்தல்களை அலட்சியப் படுத்திவிட்டு, காங்கிரசுக்காரர்கள் செய்து வந்த கேடுபாடுகளை கதையாக்கி, காட்சி வடிவாக்கி நாடகமாக—இசை நிகழ்ச்சியாக—வில்லுப்பாட்டாக, மேடை கீதமாக எடுத்துக்காட்டுவதன் மூலம், அந்தக் கட்சியின் முகத்திரையைக் கிழித்துப் போடவேண்டும்.

—என்பதாக நண்பா, கடந்த இரு கிழமைகளாக பேரறிஞர் அண்ணா அவர்களது நாடகமாடிடலாம் என்ற தம்பிக்கு எழுதிய மடல், நமக்கு எடுத்துக்காட்டியிருக்கிறது.

1956-லே எழுதப்பட்டதுதான் அது! எழுதப்பட்ட நாளின் நிலை, இன்று வரையிலே மாறியிருக்கிறதா என்று சிந்தித்துப் பார்க்கிற தகுதி நமக்கிருக்கிறது. சிந்தித்துப் பார்த்தாகவேண்டும்.

1967-லே காங்கிரசுத் துரைத்தனம் பலமாநிலங்களிலே தூக்கியெறியப்பட்டாலும், அதன் பின் நடைபெற்ற பல இடைத் தேர்தல்கள் மூலம் காங்கிரசுக் கட்சிக்குப் பலமான காயங்களுக்குக் கட்டுகள் போடப்பட்ட நிலைமைகள் தோன்றியிருந்தும், காங்கிரசுக் கட்சிக்கும், அதன் தலைமைக்கும் இன்னமும் தெளிவேற்படவில்லை என்பது தெளிவாகத் தெரியும்போது, நாம், மீண்டும் பேரறிஞர் எடுத்துக்காட்டியிருப்பது போன்ற நாடகங்களையும், நல்விளக்கங்களையும் மேடையேற்றிக் காட்டி மக்களுக்குத் தெளிவேற்படுத்தித் தீர வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறோம்.

1940-லே வெள்ளைக் கவர்னரின் கைலாகுக்குக் காத்துக் கிடந்தோர், காங்கிரசுக்கட்சியின் தியாகத்தையே—சுதந்திரப் போராட்டத்தையே கேலியும் கிண்டலும் செய்து கொண்டிருந்தோர், 1947க்குப் பிறகு முதலமைச்சர்களின் கருணை கடாட்சத்துக்கும், அவர்களை விருந்துக்கழைத்து சுவைபடப் படைத்து தானே நேரில் இல்லாவிட்டாலும், தக்கவர் மூலம் தனக்கோர் அமைச்சர் பதவி தேவை என்பதை சூசகமாக—ஆழம் ஆழமாக எடுத்துக் காட்டும் நிலைமையை அடைந்த தன்மை அன்று மட்டுமல்ல இன்றும் கூட முழுதும் மாறிவிடவில்லை.

அரசியலில் அல்லாவிட்டாலும், சமூகத்தில் உயர்ந்த இடத்தைப் பிடித்துக் கொண்டிருக்கும் ஒரே ஒரு தகுதியை மட்டும் கொண்டிருப்போர். அந்த ஒரே தகுதியைக் காட்டியே அரசியலிலேயும் தன் முதன்மை ஸ்தானத்தை நிலை நாட்டிக்கொள்ள முனையும் இழிவுச் செயல் இன்று வரையில் மாறிப்போய்விடவில்லை,

இந்த நிலைமைகளுக்கிடையேதான் இதுபோன்ற இழிச் செயல்களுக்கு மூல வித்துக்களாகி இருந்தோர் இப்போதும் நடைபெறவிருக்கும் நகராட்சி மன்றத் தேர்தலிலே தங்கள் வல்லமையைக் காட்ட வருகிறார்கள், வாய் வீரம் ஒன்றையே துணையாய்க் கொண்டு!

இருபதாண்டுக் காலம் உலகத்தின் செருக்கெல்லாம் ஒட்டுமொத்தமாகக் குத்தகைக்கு எடுத்துக் கொண்டவர்களாக கோலோச்சிக் கொண்டிருந்தவர்களைத்தான் கடந்த 1967-ம் ஆண்டு காலைவாரிவிட்டது! கண—மண் தெரியாமல் கண்டதே காட்சி! கொண்டதே கோலம்!! என்ற இரங்கத்தக்க நிலைமையினை காங்கிரசுக்குப் பரிசாய்த் தந்தது நாடு!

ஏன்?

முழுமையாக திராவிட முன்னேற்றக் கழகம் இன்னமும் ஓர் ஐந்தாண்டுக் காலம் இந்த நாட்டை ஆண்டு முடிக்கவில்லை.

நாட்டு மக்களின் நலிவு போக்கத் தீட்டிய திட்டங்கள் செயலாகி, பயனை அறுவடை செய்து காட்டி குப்பனையும் கோவிந்தனையும் குபேரர்களாக இல்லாவிட்டாலும் முழுமையான குடிமகனாக சராசரி மனிதனாக வாழச் செய்ய முடிந்த நிலைமைகளைச் செயல்படுத்தப் போதிய அவகாசம் அல்ல இந்த ஐந்தாண்டுகளும்!

இரண்டே இரண்டு ஆண்டுகள் மட்டுமே முழுமையாக முடிவு பெற்றிருக்கிறது. காங்கிரசுக் கட்சி கடந்த இருபதாண்டுக்காலத்தில் சந்தித்த கோரங்களைவிட—அவலங்களைவிட, திராவிட முன்னேற்றக் கழகம் கடந்த ஈராண்டுகளில் சந்தித்தவைகள் ஏராளம்! பயங்கரம் மிகுந்தது! அஞ்சத்தக்கதொரு நிலைமையில் நாடு, முழுகிக்கொண்டிருந்த வேளையில் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கிறது என்பதனை நண்பா, நாம் எத்தனைமுறை, எந்தெந்த இடங்களிலே எடுத்துக் காட்டியிருக்கிறோம்?

நாடு — சுடுகாடாகிக் கொண்டிருந்தபோது பேரறிஞர் அண்ணா அவர்கள், அதனைத் தடுத்து சோலையாக்கும் ஒரு முயற்சியிலே நம்மை ஈடுபடுத்தினார்! வழிகாட்டிக்கொண்டிருந்த நடுப்பாதையிலேயே நம்மையெலாம் அனாதைகளாகி விட்டுவிட்டு அமரராகிப்போனார்! பேரறிஞர் காட்டிய பாதையிலே நாம் நடைபயின்று கொண்டிருக்கிறோம்! பாலையைச் சோலையாக்கும் பணியில் நம்மைநாம் முழுமூச்சாக ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறோம்!

ஊராட்சி மன்றத் தேர்தல்களோ, நகராட்சி மன்றத் தேர்தல்களோ மட்டுமே அவைகளின் முடிவு

கள் மூலம், ஒரு ஆட்சியின் சாதனைகளை முழுதுமாகப் பிரதிபலித்துக் காட்டுவதாக ஆகிவிடாது!

காங்கிரசுக்காரர்கள், நாடாண்டு வந்த பத்தாண்டுக்காலம் — பதினைந்தாண்டுக்காலம் வரையில் சுதந்திரத்தைக் குழந்தையாகவே வருணித்து வந்தார்கள் என்பதை நாடு மறந்துவிடக்காரணமில்லை.

எந்த ஒரு கேட்டை எடுத்துக்காட்டி காரணம் கேட்க முனைந்தாலும், சுதந்திரம் குழந்தைப் பருவத்திலிருக்கிறது–மழலை உதிர்க்கிறது தவழ்கிறது–தத்தித் தத்தி நடக்கிறது என்றுதான் பதிலிறுத்தார்களே ஒழிய —காரணகாரியத்தோடு விடையிறுக்கவில்லை—விடையிறுக்க முடியவில்லை!

ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தின் கேடுபாடுகளைக் களைந்து, துரைத்தனத்தை இந்தியமயமாக்கவே காங்கிரசுக்காரர்களுக்குப் பத்தாண்டுக்காலம் போதவில்லை. சுதந்திரக் குழந்தை என்ற வருணனையிலேயே நாட்டை நடத்திச்சென்று கொண்டுவந்தனர்!

நண்பா! நாடாள நாம், நம்மை பொறுப்புக் குடையோராக ஆக்கிக்கொண்ட பின்னர், காங்கிரசுக்காரர்கள் நம்மீது சாட்டியுள்ள குற்றச்சாட்டுக்களுக்கு ஒரு பட்டியல் போட்டுப்பார்! நானே காட்டிவிட முடியும்—ஏடு இடம் தந்தால்! அதனாலேயே நீ அந்த பணியை நிறைவேற்றிக்கொள்ளக் கோருகிறேன்!

குற்றச்சாட்டுக்களுக்குப் பதில் சொல்லிக்கொண்டிருக்கவே நமக்கு காலம் போதவில்லை என்று இருக்கிற நிலைமைக்கு ஊடேயே, பக்தவத்சலங்களாலும், காமராசர்களாலும் பாழாக்கப்பட்ட நிருவாகக் கேந்திரத்தை பழுது பார்த்துக்கொண்டு வந்திருக்கிறோம்! பழுது பார்த்துக்கொண்டு வந்துகொண்டிருக்கிற இடையிலேயே, பயனுள்ள சில பல திட்டங்களையும் சட்டங்களையும் செயல்படுத்தி செவ்விய வாழ்வுக்கு அடித்தளம் அமைத்துக்கொண்டு விட்டிருக்கிறோம்!

அடித்தளம் அமைத்துக் கொண்டிருக்கிறோம் என்றுதான் நண்பா, இங்கே குறிப்பிட்டேன்! கட்டப்படவிருக்கிற கட்டிடம் எப்படி இருக்கும் என்பதற்கு வரைப் படத்தைதான் நம்மால் புரிந்துகொள்ள முடியுமே தவிர, உள்ளே நுழைந்து இது இது இப்படி இருக்கிறது என்று சொல்ல இப்போது முடியாது— அடித்தளம் மட்டுமே அமைத்திருக்கிறோம்!

அடித்தளம் அமைக்கும் பணியிலேயே நாம் இருந்துகொண்டு பாராளுமன்றத்துக்கு இரு துணைத் தேர்தல்களையும், சட்ட மன்றத்துக்கு மூன்று துணைத் தேர்தல்களையும் சந்தித்து மக்களது ஆதரவினைப் பெருவாரியாகப் பெற்றிருக்கிறோம்! இன்னும் சொல்லப் போனால், நாம் நினைத்துக்கூடப் பார்க்காத அளவுக்கு பாண்டிச்சேரி மாநிலத்தின் ஆட்சி அதிகாரத்தையே நம் கைக்குக் கொண்டு வந்திருக்கிறோம்! இரண்டு மாநிலங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகளுக்கு ஆட்சி உரிமை அளித்திருக்கின்றன!

அதோ! 1957 பொதுத் தேர்தல் நடைபெற விருப்பதை எடுத்துக் காட்டி பேரறிஞர் நமக்கு நாடகம் நடத்தச் சொல்லி இட்ட கட்டளை நமக்கு எதிரேயே இருக்கிறது! நாம் நமது மதிப்புக்குரிய தனிச் சின்னத் தோடு முதன் முதலாக செங்கிஸ்கானை, ஹிட்லரை, முசோலினியை, ஜாரை போர்க்களத்தில் சந்திக்க எடுத்த முடிவின் எதிரொலி அது! பேரறிஞரின் கட்டளைப்படி நடந்து பயன் பெற்றோம்; அறுவடையும் செய்துவிட்டோம்!

ஏப்ரல் 24, 26 ஆகிய இரு கட்டங்களாக தமிழகமெங்கும் நகராட்சி மன்றத் தேர்தல் நடைபெறவிருக்கிறது. மொத்தம் 95 நகராட்சிகளுக்குத் தேர்தல் நடைபெற்றாக வேண்டும்! வழக்கு என்பதன் பேரால் 11 நகராட்சிகளின் தேர்தல் தள்ளிப் போடப்பட்டிருக்கிறது. மற்ற 84 நகராட்சிகளில் இப்போது தேர்தல் நடைபெறவிருக்கிறது.

காங்கிரசுக் கட்சியின் தகாத போக்குகளை எடுத்துக் கதையாக, காட்சியாக, இசை நிகழ்ச்சியாக நடாத்திக் காட்ட இப்போது நமக்கு நேரமில்லை.

தகிடுதத்தங்களை எடுத்துக் காட்டுவது மட்டுமே நம் பணியாகவும் இப்போது இருக்கவில்லை.

காங்கிரசுக் கட்சி தன் சாதனையாக கடந்த இருபதாண்டுக் கால நிலைமைகளை எடுத்துக் காட்டி விமர்சிக்கும்.

நாம் இரண்டாண்டுக் கால சேவைகளை மட்டுமே எடுத்துக் காட்ட வேண்டியிருக்கும்.

இருபதாண்டுக்காலசேவைகள், அனைத்தும்,

நமது இரண்டாண்டுக் காலப்பணிகளுக்கு

ஈடாகாது.

என்பதனை எடுத்துக் காட்ட. வேண்டிய இடத்தில் எடுத்துக் காட்டவேண்டிய முறைப்படி எடுத்துக் காட்டித் தீரவேண்டும். குறுகிய காலத்துக்குள் அதனைச் செய்தாக வேண்டும்.

கல்விக் கண்ணைத் திறந்த காமராசர் காலம் முதல், மாணவர்களை வேட்டையாடிக் குவித்த பக்தவத்சலனார் காலம் வரையில் காங்கிரஸ் இந்த நாட்டில் கல்வி வளர்ச்சிக்குச் செலவிட்ட தொகை எவ்வளவு என்பதற்குப் புள்ளி விவரம் சேகரித்துப் புலப்படுத்த வேண்டும்.

இரண்டாண்டுக் காலத்தில் கழகத்தின் கணக்கையும் ஒப்பிட்டுக் காட்டவேண்டும்.

இருபதாண்டுக் காலத்தில் அவர்கள் தொழில் துறை நிலைமைகளையும், நாலாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்ததையும், நாலாவது திட்டமே இன்னும் உருப்பெறவில்லை யென்பதையும் தொழில் துறை அனைத்தும் திட்ட அடிப்படையானவை என்பதையும் விளக்கியாக வேண்டும்.

1966ல் வானம் பொய்த்ததால் ஏற்பட்ட தன்மைகளையும், 1968ல் பொய்த்துப் போனதன் கடுமையையும் விளக்கிக் காட்ட வேண்டும்.

இவையெல்லாம், ஒரு பொதுத் தேர்தலுக்கு முன்னால் மேற்கொள்ள வேண்டிய பணிகளாகவிருந்தாலும், காங்கிரசுக் கட்சி, இதனையே நகராட்சித் தேர்தலுக்குப் பயன்படுத்துகிறது—எழுதுகிறது — பேசுகிறது—என்பதற்காக நாம் எடுத்துக் காட்ட வேண்டியிருக்கிற விளக்கங்கள் என்ற வகையிலே விளக்கியாகவேண்டும்.

அதே நேரத்திலே நண்பா! வானம் பொய்த்துப் போய் — பருவமழை ஏமாற்றியதால் நாட்டிலே ஒரு கடுமையான வரட்சி நிலை தோன்றியிருக்கிறது!

நிவாரணப் பணிகளை மேற்கொள்ள சுமார் 20 கோடி ரூபாய்கள் வரையில் தேவைப்படலாம் என்று கலெக்டர்கள் அனுமானிப்பதாக முதலமைச்சர் நமக்குத் தெரிவித்திருக்கிறார். அந்தத் தொகையின் அளவிலேயிருந்து கடுமை எத்தகையது என்பதை நம்மால் உணரமுடியும்!

காஞ்சி 20—4—69 REGD. No. M. 8326

ஆனால், நாம் உணர்கிற அளவுக்கு நமது மதிப்பிற்குரிய சுப்பிரமணியனார் அவர்களால் உணர முடியவில்லை. காரணம் அவர் தமிழ்நாடு காங்கிரசுக் கட்சியின் தலைவர். தமிழ் நாட்டிலே நகராட்சித் தேர்தல் நடைபெறவிருக்கிறது.

வரட்சி நிலைக்கு மேற்கொள்ளப்படும் நிவாரணப் பணிகளை நாம் வளர்ச்சிப்பணிக்கு ஆக்கிக்கொள்ள முயல்கிறோம்.

சுப்பிரமணியனார் வரட்சியை மறைத்து, அரசியலாக்கி நகராட்சி வெற்றிகளாக்கிக் கொள்ள விரும்புகிறார்.

அதனாலேயே நண்பா, வரட்சிநிலை பற்றி அவரது விமர்சனம் வேறு திசையைப் பார்த்துக் கொண்டிருப்பதாய் இருக்கிறது.

வானம் பொய்த்துப் போயிற்றே, விவசாயத் தொழிலாளரும்சாகுபடியாளரும் வாழ்விழந்துபோய் இருக்கின்றனரே, அவர்களுக்கு இயன்ற வரையில் ஏதாவது நிவாரணம் தேடுவோம் என்ற எண்ணத்தில் அரசு, ஏதாவது முயற்சிகளிலீடுபடும்போது அந்த முயற்சிகளுக்குக் குந்தகம் விளையும் வண்ணமாகப் பேசுகிறார்!

நாட்டுமக்களுக்கு ஏதும் நன்மைகள் செய்து விடக் கூடாது; நன்மைகள் பெற்று துயர்தீர்ந்தவர்களாகிவிடக் கூடாது

என்ற நச்சு எண்ணத்தை இதயத்திலேந்திக் கொண்டு நகராட்சித் தேர்தலைப் பற்றிக் கனவு காண்கிறார் அவர்!

வரட்சிநிலை காரணமாகவும், வானம் பொய்த்துப் போனதன் காரணமாகவும் பற்றாக் குறையாகிவிட்டிருக்கும் உணவுப் பிரச்னைக்கு பூதாகாரமான வடிவம் தந்து பொய்ப் பூரிப்பில் தன் இதயத்தைக் காட்டிக் கொள்கிறார்.

மத்திய அரசிடம் உதவி கேட்காதே;

என்கிறார்! கூடவே, மக்களைப்பார்த்து பானையைக் கட்டுங்கள்! என்கிறார்!

பரிதாபகரமான அரசியலுக்குக் கதாநாயகனாகி விட்டிருக்கிறார் சுப்பிரமணியனார்!

இவையெல்லாம் நண்பா, நாடகம் நடத்திக் காட்டித் தெளியவைக்க வேண்டிய காட்சித்துணுக்குகள்.

காலமும் இல்லை—நேரமும் இல்லை. செட்டியாரும், முதலியாரும் புத்துயிர் பெற்று ஐயரும், அய்யங்காரும் புதுவடிவங்கொண்டு நாயுடுவும் நாயகரும் அறிமுகப் படுத்தப்பட்டு இந்தத் தேர்தலிலே இயக்கப்படுகிறார்கள்.

இவற்றையெல்லாம் முறியடிக்க நண்பா, நாம் வீட்டுக்கு வீடு ஏறியிறங்கவேண்டும்! புதியபணியல்ல! பழக்கப்பட்ட பணிதான்! செயல் படுத்திக்கொண்டிருக்கும் வேலைதான்! என்றாலும் புதிய புதிய வடிவத்திலே வந்துகொண்டிருக்கும் காங்கிரசுக் கட்சியின் பேராசையை, பேழையை, நோட்டுக்கற்றைகளை நாம் சந்திக்க வேண்டுமென்றால் தூய இதயத்தைச் சுமந்து கொண்டிருக்கும் நமது கொள்கை வலுவை—நிலைமை விளக்கத்தை வீட்டுக்கு வீடு சென்று புகுத்தியாக வேண்டும்!

பேரறிஞர் தம் நீள்துயிலுக்குப்பிறகு கழகம் கலகலத்துப் போய்விட்டது என்று எடுத்துக்காட்ட முயற்சி மேற்கொண்டிருக்கிறார்கள் காங்கிரசுக்காரர்கள்.

அவை பொய் முயற்சி: கழகம் ஒன்றுதான் எங்கள் மூச்சு—அதன் வாழ்வு ஒன்றுதான் எங்கள் உயிர்

என்பதை நிருபித்துக்காட்டவேண்டியவர்களாக நாம் இருக்கிறோம்.

வாக்காளர் பெருமக்களை, தங்களுக்கு வாக்களிக்கவில்லையென்றால் தூற்றுவது காங்கிரஸ் பண்பு, எந்த நிலையிலும் இன்முகத்தோடு கரங்கூப்பித் தொழுவது நமது பண்பு.

நாம் யார்?

காங்கிரசுக்காரர்கள் யார்? என்பதனை மக்கள் புரிந்து வைத்துக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

அந்தத் தெளிவைத் திரட்டிச் சேர்த்துக்கொண்டால் போதும்!

நகராட்சிகள் அனைத்தும் நமக்குச்சொந்தமாகிப்போகும்!

இன்னொன்று நண்பா! நகராட்சிப் பணிகள் அனைத்தும் கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டதாகும். இதனை மனதிற் கொண்டுதான் டாக்டர் பேரறிஞர் அண்ணா அவர்கள் கட்சிச்சார்பற்ற முறையில் நகராட்சிகள் இயங்கவேண்டும் என்ற தம் பெருவேட்கையைத் தெரிவித்திருந்தார்கள்!

ஆனால் என்ன! எதனையும் அரசியலாக்கியே பழக்கப்பட்டுப் போன காங்கிரஸ் இதனையும் அரசியலிலிருந்து பிரிக்க விரும்பவில்லை.

எதிரொலியை எங்கும் சந்தித்துக் கொண்டிருக்கிறோம்! காலம் காங்கிரசுக்கு நல்லபாடம் தரட்டும்!

நாம், நாட்டுமக்களது நல்ல வாழ்விற்கு வேண்டிய அரும்பணிகளிலே சிந்தையை வைப்போம்!

சிதைந்தழியா சிந்தையராய் இணைந்திருந்து செய்திடுவோம் நற்பணிகள்! அதன் பயனாய் அடைந்திடுவோம் பெரும் வெற்றிகள்! வேண்டுவதெல்லாம் வீடேறி விளக்க வேண்டுவதுதான்! நான் தயாராகி விட்டேன்! நீயும் தயாராகிவிட்டாய் என்பது உண்மை தானே!

அன்புள்ள,

திருவாரூர் முத்துராமன்

...சிரியர், வெளியிடுபவர் சி.என்.ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3 6, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.